# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 09 சனிக்கிழமை (25.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 241


## ★தமிழர் விடுதலைக் கூட்டணி ★சுயேச்சைக்குழு 1 ★சுயேச்சைக்குழு 2

# வவுனியாவில் போட்டியிடும் 3 அணிகள்

# ஈ.பி.டி.பிக்கு ஆதரவென அறிவிப்பு

## தனித்தனியே நேற்று அறிக்கைகள்

வவுனியா, ஜூலை 25

வவுனியா நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் மூன்று அணிகள்—தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயேட்சைக்குழு-1, சுயேட்சைக்குழு - 2 - ஆகியன—வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை (ஈ.பி.டி.பியை) தாம் ஆதரிப்பதாக நேற்று அறிவித்துள்ளன.

அவை தனித்தனியே வெளியிட்ட அறிக்கைகளில், தத்தமது ஆதரவாளர்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களிக்குமாறு கேட்டுள்ளன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த 6,000 பேர் வாக்களிக்கத் தகுதி

கொழும்பு, ஜூலை 25

யாழ்.மாநகரசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு இடம் பெயர்ந்த மக்களில் 6 ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர் எனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு,புத்தளம், களுத்துறை, கம்பஹா, அநுராதபுரம் பகுதிகளில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களில் அவர்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

அவர்கள் அனைவரும் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர் (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் யுத்தக் குற்றத்துக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை

## புலம்பெயர்ந்த தமிழர்கள் முஸ்தீபு

கொழும்பு, ஜூலை 25

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் இலங்கை அரசின் யுத்தக் குற்றங்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள உள்ளனர் எனத் தெரியவருகிறது.

இலங்கைத் தமிழர்கள் அரசால் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டு வருகின்றமையை சர்வதேசத்துக்கு நிரூபிப்பதை நோக்கமாகக் கொண்டு உலகத்தமிழர் பேரவை (Global Tamil Forum) அமைப்பின் தலைமையில் இது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அகதிகள் நிலை குறித்தும் அவுஸ்திரேலிய அமைச்சர்கள் பேச்சு

கொழும்பு, ஜூலை 25

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அமைச்சர்கள் சட்டவிரோதக் குடியேற்றம் மற்றும் மோதல்கள் காரணமாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள் குறித்து முக்கிய பேச்சுக்களை நடத்தினர்.

இத்தகவல் கொழும்பிலுள்ள அவுஸ்திரேலியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:- (16 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுக்குப் பாதகமான எந்த நடவடிக்கையையும் எனது ஆட்சிக் காலத்தில் நான் எடுக்க மாட்டேன்

## அந்த நாடும் எனக்கு அழுத்தம் எதனையும் தரவில்லை



கொழும்பு, ஜூலை 25

எனது ஆட்சிக்காலத்தில் இந்தியாவுக்கு எதிரான, பாதகமான நடவடிக்கை எதனையும் நான் மேற்கொள்ளமாட்டேன். இந்தியாவும் எமக்கு அழுத்தம் எதனையும் தந்ததில்லை.

இந்தியாவின் 'ரெகல்கோ' இணையத் தளத்திற்கு வழங்கிய பேட்டி ஒன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்தவைவருமாறு:-

இந்தியா எமக்கு எதற்கேனும் அழுத்தம் தரவில்லை. மேலும் புரிந்துணர்வுகளை விருப்பத்துடனேயே அது வெளியிட்டது. எனக்கு ஏதாவது அழுத்தம் வந்ததென்றால் அது மேற்குலக நாடுகளிலிருந்தே.

என்றாலும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து பயங்கரவாதிகளின் மிரட்டல்களுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப் பகுதிக் கடலோரங்களில் ஒதுங்கிய சடலங்கள்; காவலூர் நீதிமன்றம் இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

குடாநாட்டின் தீவுப்பகுதிகளில் கடந்த சில தினங்களாகக் கரையொதுங்கியுள்ள 7 சடலங்களும் இந்திய மீனவர்களுடையவையாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் ஊர்காவற்றுறை நீதிமன்றம் இது குறித்து கொழும்பில் உள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி மீளக்குடியமர்வுக்கான காலவரையறையை திட்டவட்டமாகக் கூறமுடியாது என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 25

வன்னியில் கண்ணிவெடிகள் அகற்றும் பணி இன்னும் நிறைவு பெறாததால் அகதிகள் எந்தக் காலப்பகுதிக்குள் மீள் குடியேற்றப்படுவர் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது என்று மீள்குடியேற்ற அமைச்சர் றிசாத் பதியுதீன் நேற்றுக் கூறினார்.

இருப்பினும், 180 நாள்கள் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் மிக விரைவில் அம்மக்களைக் குடியமர்த்தவே அரசு முற்படுகிறது, முயற்சிக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)


Cosy Hotel & Restaurant

தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ், ஸ்பெஷல் நாண், பூரி, சூப் மற்றும் சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

Open 11.00 am to 11.00 pm

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. CALL: 0112504020

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். CALL: 021-2225899

கொசி உணவகம் Feel at home

யாழ் நகரிலும் கொழும்பிலும் நீண்ட காலமாக சுவையான, தரமான Indian, Chinees உணவு வகைகளுடன்

AC Non AC Rooms Available




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

* "A" தர பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கை நெறிகளுக்கு அனுமதி.
* குறைந்த கட்டணச் சலுகைகள், U.K யில் சகல வசதிகளும்.
* தினமும் காலை 8 மணியிலிருந்து 5 மணி வரை நேரில் சந்திக்க ஏற்பாடு. சந்தித்தவர்கள் விவரங்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு : 021 222 3818
எந்நேரமும் தொடர்பு : 0774528818
E.Mail : mg1404_2009@yahoo.com
148, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (யுனிசெவ் முன்பாக).


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குலம் கனடா பிரஜா உரிமை உடைய 29 வயது பூச நட்சத்திரம் செவ்வாய் தோசம் அற்றவருக்கு அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 0777066487


## PC SYSTEMS

Total IT Solution Providers

Dialog CDMA

5999/=

Dialog CDMA இணைப்பு
2000/= Reload இலவசம்
Dialog CDMA Package 300/=
வெளிச்செல்லும் அழைப்புக்கள் 1800 நிமிடங்கள் இலவசம்.



ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். | இல.24, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

வெளிநாட்டு அழைப்புக்கள் நிமிடத்திற்கு 3/= மட்டுமே
Internet Browsing மணித்தியாலத்திற்கு 40/= மட்டுமே
PC Systems Alady Junction Manipay.


## அகில இலங்கைத் தமிழ் பேசும் மாணவ இளைஞர் பொது மன்றம்
(ஈரோஸின் மாணவர் அமைப்பு)

16.07.2009 அன்று பல்கலைக்கழக மாணவர்கள் புத்தி ஜீவிகள், வேலையற்ற இளைஞர் யுவதிகள் ஒன்றிணைந்து மேற்படி அமைப்பை புத்துயிர்த்துள்ளனர்.

**இதன் ஆரம்ப வேலைத் திட்டமாக இளைஞர் யுவதிகளின் வேலை வாய்ப்பு விவரம் திரட்டப்பட்டு வருகிறது. விரும்புவோர்.**

**ஈரோஸ்** 152, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


## Piano/Violin Notes

Organ, வயலின், Guitar, புல்லாங் குழல், வீணை, போன்றஇசைக் கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள் தினமும் மாலை 4 மணியிலிருந்து நடைபெறுகின்றன.

S.S.Rajeindran 75, கோவில் வீதி, நல்லூர், T.P - 0713055991

## ஆங்கில கல்வி

G.C.E. (O/L) 2009 ற்கான ஆங்கில பாட துரித மீட்டல் வகுப்புக்கள் மற்றும் ஸ்போக்கன் இங்கிலிஷ் ஆகியன 20 வருடங்களுக்கு மேலான அனுபவமுள்ள ஆசிரியரினால்சுண்டுக்குளி மகளிர் மற்றும் சென். பற்றிக்ஸ் கல்லூரிகளுக்கு அண்மித்த பிரதேசங்களில் வீடுகளுக்கு வந்து கிழமை நாள்களில் காலை 9 மணிக்கும் பிற்பகல் 1மணிக்கும் இடைப்பட்ட நேரங்களில் கற்றுக் கொடுக்கப்படும். ஒரு மணித்தியாலம் ரூபா 100/= மட்டுமே அல்லது மூவர் சேர்ந்தும் பயில முடியும். தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே. இலக்கம்: 0777110872 (மாலை 7 மணியின் பின்னர் தொடர்பு கொள்ளவும்)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 100 ரூபா வால் விலை குறைக்கப்பட்டுள்ளது.

**றாஜீவ்** கால்நடை தீவன விற்பனை நிலையம், ஆனைக்கோட்டைச் சந்தி.

தொ.பே. 021 222 2867


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30 | | 26 |
| ★ |  | ★ |
| 05 | | 06 |
| ★ | | ★ |
| 1929 | | 2009 |

### R.R.அப்பாத்துரை
(ஓய்வு பெற்ற ஆசிரியர், நயினாதீவு, கனடா)

அன்பொழுகப் பேசி பாசத்தால் கண்டித்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ - வழி
காட்டிய அன்புள்ளமே
எங்குற்றீர் எமைவிட்டு

கொக்குவில் கிழக்கு. குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னைமடியில் ஆண்டவன்அடியில்

17 05
04  08
1930 2008

### அமரர் திரு. இளையதம்பி பாலசிங்கம்
(ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர்)

பல கோடி இன்பங்கள் இருந்தென்ன
பல உறவுகள் இருந்தென்ன
பல கோடி சொத்து சுகங்கள் இருந்தென்ன
எங்கள் அப்பாவுக்கு நிகர் எமக்கு
இப்பாரினில் யார்தானோ
ஆண்டு ஒன்றானாலும் நேற்றுவரை எம்முடன்
இருந்த நினைவுதான் ஆறவில்லை எம்நெஞ்சமப்பா
காலனவன் உங்களை கவர்ந்து தான் சென்றானோ
பொறுக்கவில்லையப்பா எம் நெஞ்சம் பொருமிவெடிக்கிறது
எப்போதாவது திரும்பி எம்மிடம் வருவீர்களா
என்றுதான் அப்பா எம்முள்ளம் இரங்குகிறது
சிறகு ஒடிந்த பறவையாய் கொதி எண்ணெயில்
விழுந்த புழுவாய் எம் முள்ளம் உங்கள் நினைவுகளால் துடிக்கிறது அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசடி வீதி,
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை. குடும்பத்தினர்

## முகாமைத்துவ உதவியாளர் நேர்முகப்பரீட்சை ஓக.11,12இல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு IIIக்கு தற்காலிக இணைப்புப் பெறுவதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் ஆறாம் திகதி பரீட்சை ஆணையாளரால் நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சை முடிவுகளில் இருந்து ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்ற 249 பேர் இந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன என்றும் ஏற்கனவே பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறும் அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார். (1)

## மரண அறிவித்தல்

### திருமதி மரியநாயகம் காணிக்கை முத்து (நல்லபிள்ளை)



மாதகலைப் பிறப்பிடமாகவும் 53/1 கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் காணிக்கைமுத்து (நல்லபிள்ளை) கடந்த (20.07.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியநாயகத்தின் (விஸ்வலிங்கம்), அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அலேசுப்பிள்ளை - ஞானசவுந்தரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை-லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற யோசப்பின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நல்லம்மாவின் மைத்துனியும், காலஞ்சென்ற அன்ரன் மற்றும் விமலாதேவி (இந்தியா), வைலற், ராணி, திருச்செல்வம் (லண் டன்), ஜஸ்ரின் (கனடா), காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் அருள்நாயகம் (பிரான்ஸ்), ஜெகநாதன் (உரிமையாளர், சிவராதா, நியூ சிவராதா, நியூ லிற்றில் இந்தியன்) ஆகியோரின் பாசமிகு தாயும், இருதயம் (இந்தியா), திருநாவுக்கரசு (இந்தியா), சந்திரன், இராசநாயகம், சாந்தி (லண்டன்), சுகுணா (கனடா), ஜெயந்தி (கொழும்பு), ஐடா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (25.07.2009) சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ம.திருச்செல்வம் (மகன்)
ம.ஜெகநாதன் (மகன்-சிவராதா புடவைக் கடை உரிமையாளர்)

[illegible] கோவிலடி,
[illegible] வீதி, மாதகல்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## 135 ஆம் நாள் நினைவஞ்சலியும் 64 ஆவது பிறந்தநாள் தினமும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.07.1945 | 13.03.2009 |

### அமரர் சிவசுந்தரம் அகிலாண்டேஸ்வரி

என் அப்பாம்மா என்னை பார்பதற்காக
காத்திருந்தீர்களே!
என் அப்பா உங்களை நினைத்து
துடிதுடிக்கிறார் அப்பாம்மா
என் அப்பாம்மா எங்கள் எல்லோரையும்
விட்டு எங்கே சென்றீர்கள்
எங்களை விண் உலகில் இருந்து
ஆசீர் வதிப்பீர்கள் தானே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நாணய நிதியத்தின் கடனுக்கு பின்னால் உள்ள சூக்குமம் என்ன?

இலங்கை அரசு எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் வழங்க முன்வந்துள்ள இருநூற்றியைம்பது கோடி டொலர் (சுமார் இருபத்தியையாயிரம் கோடி ரூபா) கடன் தென்னிலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பல்வேறு சர்ச்சைகளைக் கிளப்பியிருப்பது வெளிப்படையானது.

வன்னி யுத்தத்தின் போது இலங்கை அரசு நடந்து கொண்ட முறைமை, இப்போது யுத்தத்தின் பின்னரான மனித உரிமை விடயங்களில் இலங்கை அரசின் போக்குப் போன்றவற்றைச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் , இலங்கை அரசுக்கு சர்வதேச நாணய நிதியம் அந்த அரசு கேட்ட தொகையிலும் விட அதிக தொகையைக் கடனாக வழங்க முன்வந்துள்ளமையானது மோசமான நடத்தைக்குக் கிடைத்த சன்மானம் மற்றும் வெகுமதி என விமர்சனம் செய் திருக்கின்றது. நாணய நிதியம் தனது முடிவை மறுபரி சீலனை செய்யவேண்டும் என்றும் அது கோரியிருக் கின்றது.

எனினும், அந்தக் கோரிக்கை - இந்தப் பிந்திய கால கட்டத்தில் - எடுபடும் என்று நம்புவதற்கு இடம் ஏதும் இருக்கவில்லை. பெரும்பாலும் இன்று இந்தப் பத்தி வாசிக்கப்படும்போது இலங்கைக்கான மேற்படி கடனை வழங்குவதற்கு ஆதரவான தீர்மானத்தை சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குநர் சபை நிறைவேற்றியிருப்பது பற்றிய செய்தி ஊடகங்களுக்குக் கிட்டியிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

'கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற பேச்சுமொழிக்கு அமைய கடன்பட்டுக் கலங்க வேண்டிய இலங்கை அரசு, அதற்குப் பதிலாக 'கேட்டதோ 190 கோடி டொலர்; கிடைப்பதோ 250 கோடி டொலர்' என்று குறிப்பிட்டு மகிழ்கிறது; இறும்பூதெய்திக் குதிக்கின்றது.

ஆனால் இந்தக் கடன் வழங்கும் விடயத்தின் பின்னால் இரகசிய சூட்சுமங்கள் பல புதைந்து கிடக்கின்றன என பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. அடித்துக் கூறுகின்றது.

இந்தக் கடனைப் பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசு செய்துகொண்டுள்ள இரகசிய உடன்பாட்டைப் பகிரங்கப்படுத்தும்படியும் அக்கட்சி கோரியுள்ளது.

அதேசமயம் இக்கடன் பெறுவதற்கான ஏற்பாட்டை ஒட்டி அக்கடன் கோரிக்கையை உறுதிப்படுத்தி இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் ஒப்படைத்த கடன் ஒப்புதல் கடிதத்தின் (Letter of Intent) உள்ளடக்கத்தைப் பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே கூறியிருக்கின்றார்.

பிரதான எதிர்க்கட்சியிடமிருந்து வெளிப்பட்டுள்ள இக்கோரிக்கை நியாயமானது. இந்தக் கடனைப் பெறுவது என்னவோ இலங்கை அரசுதான். ஆனால் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தப் போகின்றவர்கள் நிச்சயமாக இலங்கை நாட்டின் குடிமக்கள்தாம். அவர்களின் வரிப்பணத்தில் இருந்து தான் இக்கடனைத் திருப்பிச் செலுத்தி அடைக்கப்போகின்றது அரசு.

எனவே யாருக்காகக் கடன் பெறப்படுகின்றதோ - யார் இந்தக் கடனை அடைக்கப் போகின்றார்களோ - அவர்களுக்கு இக்கடன் பற்றிய முழு விவரங்களும் தெரிந்திருக்க வேண்டும் என்று கோருவதில் நியாயம் உண்டு. என்னென்ன நிபந்தனைகளின் கீழ் அது வழங்கப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ளவேண்டிய தேவையும் உரிமையும் நாட்டு மக்களுக்கு உள்ளது.

அதுமட்டுமல்ல, இத்தகைய பெரும் தொகை கணக்கு வழக்கு நடவடிக்கைகளில் ஒளிவு மறைவுக்கு இடமிருக்கக் கூடாது. வெளிப்படையானதாகவும் பொறுப்புக்கூறத் தக்கதாகவுமே இத்தகைய விவகாரங்கள் கையாளப்பட வேண்டும். அதுவே சர்வதேச பொது நடைமுறையுமாகும்.

ஒருபுறம் நாட்டு மக்களின் சார்பில் எதிர்க்கட்சிகள் விடுக்கும் வற்புறுத்தலை ஏற்று இந்தக் கடன் பற்றிய உள் சூக்குமங்களை வெளிப்படுத்த வேண்டிய - பகிரங்கப்படுத்த வேண்டிய - கடப்பாடு இலங்கை அரசுக்கு உண்டு.

அதேசமயம், சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, எல்லைகளற்ற ஊடகவியலாளர் இயக்கம் போன்ற கட்டமைப்புகளின் ஆட்சேபனை, எதிர்ப்புகளை மீறி இலங்கைக்குக் கடன் வழங்கும் சர்வதேச நாணய நிதியமும், மறுபுறத்தில் இவ்விடயத்தில் நடவடிக்கையை மூடுமந்திரமாக மேற்கொள்ளாமல் - ஒளிவு மறைவாகச் செயற்படாமல் - பகிரங்கப்படுத்த வேண்டிய பொறுப்புக் கொண்டுள்ளது.

கடன் வேண்டும் தரப்பும், கடன் கொடுக்கும் தரப்பும் சர்வதேசத்துக்கும், இலங்கைப் பொதுமக்களுக்கும் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாட்டில் உள்ளன என்பதால், ஐ.தே.கட்சி கோருவது போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்படுவதே நியாயமானது.

அது மாத்திரமல்ல, அத்தகைய விடயங்கள் குறித்து மக்கள் பிரதிநிதிகள் சபையில் - நாடாளுமன்றத்தில் பொது விவாதம் நடத்தப்படுவதும் ஆரோக்கியமான ஜனநாயக அரசியலுக்கு - ஆட்சிமுறைமைக்கு - முக்கியமானது.

அத்தகைய பொது விவாதத்துக்குத் தயார் என அரசுத் தரப்பில் வரவேற்கப்பட்டிருப்பதும் நல்ல அறிகுறியே. அதற்கு முன்னர் கடன் பற்றிய நிபந்தனைகள் அம்பலப்படுத்தப்படுவது பின்தள்ளக்கூடியதல்ல.

# இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் சொந்த இடங்களிலேயே குடியமர்த்தப்படவேண்டும்

## அமெரிக்க உதவித் தூதுவரிடம் அரச சார்பற்ற இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்கள் அனைவரும் அரசின் 180 நாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமது சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த அமெரிக்க உதவித் தூதுவர் நதன் ஏ.ஜோன்ஸ் தலைமையிலான குழுவிடம் மேற்படி இணையம் கையளித்த மகஜரில் இக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் பேசும் மக்களின் மனங்களில் இடம்பெயர்ந்த மக்கள் பிரச்சினை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இதைக் கருத்திற்கொண்டு 23 அங்கத்துவ நிறுவனங்களைக் கொண்ட எமது நிறுவனத்தில் 11 நிறுவனங்கள் ஏறத்தாள 11 ஆயிரம் பேர் கொண்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவியளித்து வருகின்றன. உடுபுடைவைகள், போசாக்குப் பொருள்கள், தினசரி தேவைப்படும் பொருள்கள், காலை உணவு, பால் உணவு, மரக்கறிகள், மீன், இறைச்சி, குடிதண்ணீர் விநியோகம், கழிவறை வசதிகள், வாழ்விட வசதிகள் அமைத்தல் போன்றவற்றை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இந்தப் பணிகளுக்கான எமது ஸ்தாபனம் பல மில்லியன் ரூபாக்களைச் செலவழித்து வருகின்றது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் உள்ள மக்களில் ஒரு பகுதியினர் வவுனி யாவிலேயே குடியமர்த்தப்பட இருப்பதாக அறியவருகிறது. இந்த மக்கள் அரசின் 180 நாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அவர்களின் சொந்த இடங்களிலேயே குடியமர்த்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டால் அது மீள்குடியமர்த்தல் அல்ல. அது வேறு இடத்தில் குடியமர்த்துவதாகவே இருக்கும். இந்த விடயம் சகல அதிகாரிகளதும் கவனத்தை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ப)

# மன்னார், யாழ்ப்பாணப் பிரதேச உப்பளங்களில் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு அரசு முயற்சி

## பரந்தன், காங்கேசன் தொழிற்சாலைகளும் விரைவில் செயற்படும்

கொழும்பு, ஜூலை 25

மன்னார் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் உள்ள மத்திய தர உப்பளங்கள் பலவும் விரைவில் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன. இந்த உப்பளங்கள் விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுவதற்கான முயற்சிகளை கைத்தொழில் அமைச்சு எடுத்து வருவதாக அறியப்படுகின்றது.

ஆனையிறவு உப்பளத்தில் உடனடியாக உப்பு உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு அமைச்சு முடிவு செய்திருப்பதாகவும் அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதால் அரசாங்கத்தின் அங்கீகாரத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் ஆ.வி.டி பியத் திலக்க தெரிவித்துள்ளார்.

6 ஆயிரத்து 50 ஏக்கர் நிலப்பகுதியில் அமைந்துள்ள இந்த உப்பளத்தில் கடந்த காலத்தில் 50 ஆயிரம் தொன் தரமான உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்துள்ளது.

கடந்த வருடம் பெருமளவில் உப்புக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற் பட்டிருந்தது. ஆனையிறவு உப்பளத்தில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதும் உள்ளூரில் உப்புத் தட்டுப்பாட்டை பெருமளவில் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை

உள்நாட்டு போரின் காரணமாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் தன் உற்பத்தியை 1985 ஆண்டு முதல் நிறுத்தியிருந்தது. இதன் காரணமாக எல்லாவித இரசாயனப் பொருள்களும் கோஸ்டிக் சோடா, குளோரின், மற்றும் சல்பரிக் அசிட் போன்றவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தன.

இந்த நிலைமையில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை விஸ்தரித்து அபிவிருத்தி செய்து உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு அமைச்சு முயற்சிகளை எடுத்து வருகின்றது. அந்த வகையில் வேலைகளைத் தொடங்குவதற்கான முதலீட்டாளர் ஒருவரை அமைச்சு இனங்கண்டிருப்பதாகவும் ஆஸ்ரியாவைச் சேர்ந்த அவர் அரசின் அனுமதி கிடைத்த பின்னர் பணிகளைத் தொடங்க விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்திப் பணிகளுக்கு ஒரு பில்லியன் ரூபா தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### காங்கேசன் சிமெந்து உற்பத்தி

யுத்தம் காரணமாக செயலிழந்தும் சீரழிந்தும் போயுள்ள பல கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து முன்னேற்றப்படவிருக்கும் துறைகளில் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையும் ஒன்று.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் குமாரவெலகம தலைமையில் அண்மையில் ஒரு குழுவினர் இத் தொழிற்சாலையைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். அடுத்த வருடம் முற்பகுதியில் காங்கேசன் சிமெந்து உற்பத்தி ஆரம்பிக்கப்படவிருப்பதாக அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

20 வருடங்களுக்கு முன்னர் மிகத் தரமான சிமெந்தை காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை உற்பத்தி செய்துவந்தது குறிப்பிடத்தக்கது. (ப)

# யாழ். கொழும்பு விமானச்சீட்டு விலையை அரசு குறைத்துள்ளமை பாராட்டுக்குரியது

## ஜயலத் எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்- கொழும்பு விமான சீட்டின் விலையை இந்த அளவிலாவது குறைப்பதற்கு அரசு முன்வந்தமை பாராட்டத்தக்க விடயமாகும் என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

நான் யாழ்- கொழும்பு விமான சீட்டின் விலையைக் குறைக்குமாறு கடந்த முதலாம் திகதி, சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதி பரிபாலன அதிகாரி பராக்கிரம திஸாநாயக்கவுக்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்திற்கிணங்க எனது தலையீட்டில் யாழ்-கொழும்பு விமானச் சீட்டின் விலை ஆயிரத்து 500 ரூபாவால் குறைக்கப்பட்டமைக்காக நான் மிகவும் மனமகிழ்கின்றேன். இது தமிழ் மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

நான் முதலில் கதைத்து இது குறித்து கலந்துரையாடியதன் பின் இவ்வாறான தீர்வு எடுக்கப்பட்டமைக்காக உளம் மகிழ்கின்றேன். இது தொடர்பாக பராக்கிரம திஸாநாயக்கவுடன் நான் பலமுறை கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்காக நான் எப்போதும் முன்நிற்பதில் தவறுவதில்லை. தொடர்ந்தும் ஏ-9 வீதி திறக்கப்படுவதிலும் நான் எனது முழுமையான பங்களிப்பை வழங்கவுள்ளேன் -என்றுள்ளது.

# நலன்புரி முகாம்களில் உள்ள மாணவருக்கு அஞ்சல் அடையாள அட்டை விநியோகம்

நலன்புரி முகாம்களில் தங்கி யுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அஞ்சல் அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி இந்த அடையாள அட்டை விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் மூலம் 1,737 அஞ்சல் அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

பொதுநிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சின் ஒத்துழைப்புடன் இந்த அடையாள அட்டை விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பிரதித் தபால் அமைச்சர் எம்.எஸ். செல்லசாமி தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த அடையாள அட்டை விநியோகம் நடைபெற்றுள்ளது.

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருப்போர் போதியளவு தொடர்பாடல் வசதிகளின்றி சிரமப்படுவதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களுக்கு ஏற்கனவே 30 தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 25 தொலைபேசிகள் விரைவில் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாளை

| | |
|---|---|
| ஆடி 10 | 26.07.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | மு.இ. 10.58 வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | மு.இ. 11.45 வரை |
| சுபநேரம்: | 09.02 - 10.32 |
| ராகுகாலம்: | 04.32 - 06.02 |

# யாழ்., வவுனியா உள்ளூராட்சி சபைகளுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு 27, 28 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம் மாநகரசபை, வவுனியா நகரசபைக்கான தேர்தலின் அஞ்சல் வாக்களிப்பு 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்துள்ளதாகவும், உரியவர்களுக்கு வாக்குச் சீட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபைத் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பபித்துள்ளவர்களில் 183 பேர் தகுதி பெற்றிருப்பதாக வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபைக்கான தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக 473 பேர் விண்ணப்பித்திருந்த போதிலும் 335 பேரே தகுதி பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபைக்கான தேர்தலில் இடம்பெயர்ந்த வாக்காளர்கள் எவரும் விண்ணப்பிக்கவில்லை. யாழ் மாநகரசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 6,000 இடம்பெயர்ந்த வாக்காளர்கள் விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

இந்த வாக்காளர்கள் புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, அநுராதபுரம், யாழ் குடாநாடு ஆகிய இடங்களில் இருந்து விண்ணப்பம் செய்துள்ளார்கள். இவர்களுக்கான வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கும், அவற்றில் அவர்கள் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் தேர்தல் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்கு வைத்திய சாலை அபிவிருத்திச் சபை தலைவரினால் 07.08.2009 ஆம் திகதி மு.ப 10 மணிவரை வெளியிடப்பட்ட கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/= அபிவிருத்திச் சபை பொருளாளரிடம் செலுத்தி கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களை வைத்தியசாலை அபிவிருத்திச் சபை பொருளாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை,
அபிவிருத்திச் சபை.

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

**Diploma in Graphic Designing**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

**Diploma in Hardware Engineering**
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect..

**Diploma in Video Editing**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்:- 28/07/2009 09 AM

## காணி விற்பனைக்கு

புலோலி தெற்கு, உபயகதிர்காமத் தில் மந்திகை ஆஸ்பத்திரி வல்லிபுரக் கோவில் வீதி அருகில் உள்ள நல்ல சூழலில் அமைந்த வீடு கட்டுவதற்கு உகந்த நான்கரைப் பரப்பு சதுரக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

நேரடித் தொடர்புகளுக்கு:ச.புஷ்பகுமார்,
'ஆச்சிதுணை'
சம்பந்தர் கடை வீதி, கரவெட்டிமேற்கு.

## பணியாள் தேவை

பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தொழில் ஸ்தாபனத்திற்கு உருக்குத் தளபாடங்கள் செய்யும் அனுபவமுள்ள வரும் மற்றும் கேற்கிறில் இரும்பு வேலைகள் செய்வதில் அனுபவமுள்ளவர்களும் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 9050186,
021 222 2846.
(87302)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வல்வெட்டித்துறையில் உள்ள வீடு ஒன்றிற்கு பணிப்பெண் தேவைப்படுகின்றார். ஆர்வமுள்ளோர் 021-226 4391 என்னும் இலக்கத்துடன் மாலை 6 மணிக்குப்பின் தொடர்புகொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(சி/559871)

## குத்தகைக்கு

சுமார் 750இற்கு மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள், 100 இற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் ஒரே இடத்தில் தரித்து நிற்கும் விஷ்தீரணம் கொண்ட நிலப்பரப்பு குத்தகைக்குண்டு. (2009 நல்லூர் உற்சவ காலத்தில் மட்டும்) சைக்கிள் பாதுகாப்பு நிலையமாகவோ அல்லது பொருள்கள் சேவைகள் விளம்பரம் செய்வதற்கோ பயன் படுத்தலாம்.

இடம் - கோவில் வீதி, நல்லூர், (கைலாசபிள்ளையார் கோவில் அருகில்)
தொடர்புக்கு - 0776670108

குறிப்பு - (28.07.2009) இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். கூடிய குத்தகை வழங்குபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

## தேவை

யாழ்.நகரில் மத்தியில் அமைந்துள்ள (சன்றைஸ் மெடிகிளினிக்) மற்றும் பிரதான வீதியில் அமைந்துள்ள (பீரிஸ் கேசிங்ஹோம்) என்பவற்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

* வரவேற்பாளர் (ஓரளவு ஆங்கில அறிவு மற்றும் கணனி அறிவு அவசியம்)
* தாதிய உதவியாளர்
* தாதியர் (பயிற்றப்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
* மருத்துவ மாது (Midwife)

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு வரும் ஞாயிறு 26ஆம் திகதி காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

**சன்றைஸ் மெடிகிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக)

## மனோதத்துவ வைத்தியம்
*(General Psychotheraphy)*

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். சகலவிதமான நோய்களிலிருந்தும் குணமடைய பிரபல வைத்திய நிபுணரைச் சந்தியுங்கள்.

இல. 12. சிவகுருநாதர் லேன்,
Expo முன்ஒழுங்கை, யாழ்ப்பாணம்,
தொ.பே 0719315664, 021 222 2330
(யாழ்.றோட்டறிச் கழக கேட்போர் கூடம்)

## தேவை

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இடத்தில் 3 அல்லது 4 படுக்கை அறைகளைக் கொண்ட வாகனத் தரிப்பிடம் உள்ள வீடு, நிறுவனத்தின் பிரதிநிதிகள் தங்குவதற்கு தேவை.

தொடர்பு இல: 3922
(சி/559870) மே/பா உதயன்

## யாழ்ப்பாணம் மாநகர சபை
### நல்லூர் உற்சவம் 2009 - வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் வீதிகள் 27.07.2009ஆம் திகதி தொடக்கம் 21.08.2009 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும். இப்பாதைகளைத் தமது அன்றாடப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தும் பொது மக்கள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஏனைய சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

01.
* அரசடி சந்திக்கும் 2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின்அப்பாகம்.
* பிரமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் அப்பாகம்.
* செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் அப்பாகம்.

*02. பாதை மாற்றம்*
* பேருந்துகள் சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி கச்சேரி நல்லூர் வீதி செம்மணி வீதி வழியாகப் பேருந்துகளும் சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடை செய்யப்படும்.
* பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதி வழியாக பேருந்துகளும் சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடை செய்யப்படும்.

*03. வாகனத் தரிப்பிடங்கள்*
* முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில். கந்தர்மடச் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில் அம்மன் வீதி பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில். செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

# அந்தியேட்டி அழைப்பு



## சின்னத்துரை தங்கமுத்து

அன்னை மடியில் 18.02.1932
ஆண்டவன் அடியில் 28.06.2009

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.07.2009) ஞாயிறு முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் அதனைப் பெருமனத்துடன் மன்னித்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்

பெரியமாவடி,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

## இடம்பெயர்ந்தோர் நிவாரண விநியோகம்

குடாநாட்டில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான ஜூலை மாதத்துக்கான நிவாரணத்தை எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பிக்குமாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் ப.நோ.கூ. சங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விநியோகத்துக்கான பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை செயலகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பெற்று களஞ்சியத்தில் பொருள்களை எடுத்து விநியோகத்தை ஆரம்பிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

## வினைத்திறமை காண் பரீட்சை நாளை

அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களுக்கான வினைத்திறமை காண் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாணத்தில் நடைபெறும்.

அத்துடன் கணனி தேர்ச்சிபற்றிய எழுத்துப் பரீட்சையும் நடத்தப்படவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (1)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
க.சிவகுமார் அவர்களின் அன்புத் தாயார்

### கணபதிப்பிள்ளை அன்னபாக்கியம்

அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தரும்,
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கரவெட்டி.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 ★ 10 ★ 1920



மறைவு 18 ★ 07 ★ 2007


### அமரர் பொன்னையா சண்முகம்

ஆண்டிரண்டு சென்றதையா
ஆறவில்லை எம்மனது!
மக்கட் செல்வமெமை
மாண்புடனே வாழ
வழிகாட்டி நின்றீர் ஐயா
மருமக்கள் மனம் குளிர
பழமொழிகள் கூறிநின்றீர்
பேரெமக்கு கதைகள் கூறி
மகிழ்வுடன் போற்றிடுவீர்
ஆண்டிரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

"சத்தியபதி"
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(87317)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. அம்பாள் தேருக்கு எழுந்தருளுவதையும் தேரில் ஆரோகணித்துப் பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: லக்ஷ்மன்)

# தென்மராட்சிப் பிரதேச அரச காணிகளின் பயனாளிகளுக்கு 'பேர்மிட்டுகள்' வந்துள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை25

தென்மராட்சிப் பிரதேச அரச காணிகளின் கிராம விஸ்தரிப்புத் திட்டப்பயனாளிகளுக்கான காணி 'பெர்மிட்டுகள்' பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச காணிக் கிளைக்கு வருகைதந்து 'பெர்மிட்டுகளைப்' பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

**கைதடி, ஊரியான்காடு-** கிட்டினன் சேகரன், சுப்பிரமணியம் ஜெயசுதா, கிருஷ்ணன் கெங்கேஸ்.

**நேவத்தை-** மார்க்கண்டு அன்னப்பிள்ளை, சந்திசேகரம் ராஜினி.

**நாவற்குழி, மணல்காடு-** பெர்ணாண்டோ காணிக்கைமேரி, அந்தோனி கொன்ஸிமேரி.

**மந்துவில் மாத்தளாங்காடு-** ஆறுமுகம் லதீபன்.

**மிருசுவில் படித்த மகளிர் திட்டம்-** சுப்பிரமணியம் இராஜேஸ்வரி, பிரேமதாஸ் தயாநிதி, ஆழ்வாப்பிள்ளை இலட்சுமி, வேதநாயகம் சசிகலா.

**பண்டவயல் கலட்டி-** செல்லையா சின்னத்துரை.

**தென்பி-** சிதம்பர நடராசா சுரேஸ்.

**வரணி, இயற்றாலை-** சின்னர் கந்தசாமி.

**எருவிடல் கலட்டி-** வ.சின்னப்பிள்ளை, செல்வராசா மகேஸ்வரி, வைத்திலிங்கம் இராமச்சந்திரன்.

**கெற்பேலி-** ஆசைப்பிள்ளை அன்னராசா.

**நாவற்குழி மேற்கு-** ரஜனிகாந்த ரஜனி.

**சாவான் கோட்டை-** பாஸ்கரன் மதீனா.

(203-207)

## சுகாதார அமைச்சர் யாழ்.வருவார்

யாழ்ப்பாணம், ஜூலை25

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குறைபாடுகளை நேரில் பார்வையிடுவதற்காக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா விரைவில் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வைத்தியசாலையில் நிலவும் பல்வேறு விதமான குறைபாடுகள் மற்றும் முக்கிய மருந்துகளுக்கு நிலவும் தட்டுப்பாடு போன்றவை குறித்தும் அமைச்சரின் வருகையின் போது ஆராயப்படவுள்ளது. (224)

## வலி.மேற்குப் பிரதேசத்தில் மேம்படுத்தல் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை25

வலி.மேற்குப் பிரதேச சபைக்கு உள்ளூராட்சி மேம்படுத்தல் திட்டம் பொது மக்களாலும்- பொது அமைப்புக்களாலும் முழுமையாக வரவேற்கப்படுகின்றது.

இதனால் 36 மில்லியன் ரூபாய் செலவில் பலநோக்குத் திட்டம் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கப்படுகிறது.

இவ்வாறு பொது அமைப்புக்களின் முன் கருத்து வெளியிட்டார் வடமாகாண உள்ளூர் சேவை மேம்படுத்தல் நிறுவன திட்டப் பொறியியலாளர் எந்திரி எஸ்.சுரேன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

உட்கட்டுமான மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படித் திட்டத்தை நடைமுறைப் படுத்த சூழலியலாளர், சுற்றுச் சூழல் நிபுணர் மற்றும் கீறீன்ரெக் நிபுணர் வருகை தந்துள்ளனர்.

இந்த அதிகாரிகள் இத்திட்டம் இடம்பெறும் இடத்தையும் சூழலையும் பார்வையிட்டுள்ளனர்.

வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் சுழிபுரம் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணியால் முன்வைக்கப்பட்ட கருத்திட்டம் மிகப்பயனுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

செயலாளரின் கோரிக்கை மற்றும் பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க இத்திட்டம் 2010இல் நிறைவேற்றி பொதுமக்கள் பாவனைக்கு விடப்படும் என திட்டப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (203-302)

## கலையரசு சொர்ணலிங்கத்தின் 27ஆவது நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை25

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் கலையரசு சொர்ணலிங்கத்தின் 27ஆவது நினைவுதின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் லோட்டன் வீதியில் அமைந்துள்ள சொ.பாலகிருஷ்ணனின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

மறுமலர்ச்சி மன்றத்தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நீதிபதி திருமதி ஜோய்மகிழ் மகாதேவன் கலந்து கொள்வார்.

கலையரசின் திருவுருவப் படத்துக்கு குழந்தை சண்முகலிங்கம் மலர்மாலை அணிவிப்பார். வரவேற்புரையை மறுமலர்ச்சி மன்ற அக்கிராசனர் ச.நடேசபாத இருதயன் நிகழ்த்துவார்.

''கலையரசு சொர்ணலிங்கத்தின் அரங்க நுட்பங்கள்'' என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.ரதிதரன் வழங்குவார்.

நிகழ்வில் கலையரசு ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டிக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (201)

## குறிப்பிட்ட இடங்களில் இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஜூலை25

அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல்5மணிவரை குறிப்பிட்ட சில இடங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் கிளையினர் அறிவித்துள்ளனர்.

கரம்பொன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி முழுவதும் ஆகிய பிரதேசங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (201)

## சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 102ஆவது நிறைவுதின நிகழ்வு

வடமராட்சி, ஜூலை25

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் 102ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய சதாவதானி அரங்கில் நிலையத் தலைவர் கி.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.நடராசாவும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி த.ஜெயராஜா, பருத்தித்தறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

''கதிரைவேற்பிள்ளை அவர்களின் சமூக சிந்தனை'' என்னும் தலைப்பில் ஆசிரியர் ப.செல்வவிநாயகத்தின் சிறப்புச் சொற்பொழிவும் ''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்னும் தலைப்பில் தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை மாணவர்களின் வில்லுப்பாட்டும், 'இன்றைய அறிவியல் நாகரிக வளர்ச்சி தமிழர்தம் வாழ்வியலைப் பெரிதும் பண்படுத்தி வருகிறது. புண்படுத்தி வருகிறது' என்னும் தலைப்பில் அகில இலங்கை இளங்கோ கழகம் வழங்கும் பட்டிமன்றமும் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன. (201-236)

## அல்லைப்பிட்டியில் மினிகோப் சிற்றி திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை25

வேலணை ப.நோ.கூ. சங்கத்தால் அல்லைப்பிட்டியில் மினிகோப் சிற்றி விற்பனை நிலையம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு விற்பனை நிலையத்ததைத் திறந்து வைக்கவுள்ளார். (201- 224)

## லயன்ஸ் கழகத்தின் பட்டய நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை25

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் 22ஆவது பட்டய நிகழ்வும், 23ஆவது பதவியேற்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள துரைஜயா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் டாக்டர் இ.சாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக லயன்ஸ்கழக முதலாவது பதில் மாவட்ட அலுவலர் லயன் எஸ். ஜெயவத்சலன் அவரது பாரியார் லயன் ஜெ. சயந்தினி ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட முன்னாள் இணைப்பாளர் லயன் டாக்டர் வி. தியாகராஜா அவரது பாரியார் லயன் தி. ரஞ்சிதமலர் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## திருமறைக் கலாமன்றத்தின் கலைநிலா அரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஜூலை25

யாழ். திருமறைக்கலாமன்றத்தால் நடத்தப்படும் மாதாந்த அரங்க நிகழ்வான கலைநிலா அரங்கின் இம்மாதத்திற்கான கலை நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் நடனங்கள், பாட்டு, ஓர்கன் இசை போன்றவற்றுடன், யாழ். மத்திய கல்லூரி மாணவர்களின் நடனமும் சிறப்பு நிகழ்வாக யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் 'கலைஞனின் கனவு' நாட்டிய நாடகமும் இடம் பெறும். (203- 38)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அலுவலகத் திறப்புவிழா அண்மையில் கச்சேரி-நல்லூர் வீதியில் அமைந்துள்ள 'புளூஹெவன்' ஹோட்டலில் நடைபெற்றது. இதில் விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே அலுவலகத்தில் பணிகளை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் முன்னாள் மேல்மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்தித் திணைக்களம்
# கேள்வி அறிவித்தல்

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் சார்பாகப் பிராந்திய கேள்விச் சபைத் தலைவரினால் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடம் இருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | இக்ராட் பதிவு | மீளளிக்கப்படாத பிணைப்பணம் | மீளளிக்கப்படும் பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | நாகபூஷணி கிழக்கு கரையோர வீதி 275மீற் - 1000 மீற் (725மீ) திருத்தம் | M - 7 (வீதிகள்) | 500.00 | 15,000.00 |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. ICTAD வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

III. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

IV. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் தனது புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

V. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை வேலை நாள்களில் மு.ப. 8.30இல் இருந்து பி.ப. 4.15 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

VI. ஆங்கில மொழியிலான ஒப்பந்த ஆவணங்களை 27.07.2009 முதல் 04.08.2009 வரை வேலை நாள்களில் முற்பகல் 9.00 மணியில் இருந்து பிற்பகல் 3.00 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளமுடியும்.

VII. அந்தந்த வேலைக்குரிய பொறிவைத்த கேள்விகள் தலைவர், பிராந்திய கேள்விச் சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு 06.08.2009 முற்பகல் 10.30 மணிக்கு முன்பாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். இதன்பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

VIII. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில் தருநர் பொறுப்பேற்கமாட்டார்.

எந்திரி சி.பூ.சிவநேசன்,
பிரதம பொறியியலாளர்,
தலைவர், பிராந்திய கேள்விச் சபை.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/559854)

## பிரசாரக் கூட்டங்கள்

நல்லூர்,ஜூலை25
அரியாலை சன சமூக நிலையத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கும் நல்லூர் அரசடி சன சமூக நிலையத்தில் பி.ப. 4.30 மணிக்கும் சிறிரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இக்கூட்டங்களில் மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கலந்துகொள்ளுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
(203-111-86)

## கிணறு புனரமைப்பு

யாழ்ப்பாணம்,
ஜூலை25
நவாலி வடக்கு, தலுவில் வயலில் உள்ள பொதுக்கிணறு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக இத்திட்டம் பூரணமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள்புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நீண்டகாலமாக மக்கள் பாவனையின்றி இருந்த பொதுக்கிணறே கடந்த வாரம் வலி. தென்மேற்குப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அதிகாரிகளால் திறந்துவைக்கப்பட்டது.
(203-302)

## காணிகள் விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, பலாலி வீதிக்கு அண்மையில் பயிர்ச்செய்கைக்கு உகந்ததும், நிறுவனங்கள் அமைப்பதற்குமான மின்சாரம், தண்ணீர், போக்குவரத்து வசதியுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புத்தூர் வீதிக்கு அண்மையில் மத்தாளோடையில் பயிர்ச்செய்கைக்கு உகந்ததும், தண்ணீர் வசதியுடன் கூடிய 40 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு: 077 6172436**

(87000)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### பாடத்திட்டம் மற்றும் பரீட்சை விதிமுறைகள் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

### வணிகமாணி கற்கைநெறி (வெளிவாரி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்படும், வணிகமாணி கற்கைநெறிக்கான (வெளிவாரி) பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய பாடத்திட்டமும் பரீட்சை விதிமுறைகளும் 2008/2009 கல்வியாண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இப்புதிய பாடத்திற்கமைந்த முதலாம் வருடத் தேர்வு மே/ஜூன் 2010இல் நடைபெறும்.

மேலும் தற்போது நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் 2015/2016 கல்வியாண்டு வரை பின்வரும் ஒழுங்கின் பிரகாரம் நடத்தப்படும்.

| பரீட்சை | கல்வியாண்டு |
|---|---|
| வணிக முதற்தேர்வு | 2012/13 |
| வணிகமாணி பகுதி - I | 2013/14 |
| வணிகமாணி பகுதி - II | 2014/15 |
| வணிகமாணி பகுதி - III | 2015/16 |

தற்போது நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டத்தின்கீழ் பதிவு செய்த மாணவர்களுக்கும், ஏற்கனவே பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடையத் தவறிய தேர்வு நாடிகளுக்கும் 2015/16 கல்வியாண்டு வரை பழைய பாடத்தில் பரீட்சைகளுக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும்.

புதிய பாடத்திட்டம் மற்றும் பரீட்சை ஒழுங்கு விதிகள் தொடர்பான கைந்நூலை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 - 222 - 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.


பதிவாளர்.
23.07.2009

(சி/559853)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் சின்னத்தம்பி நடேசமூர்த்தி (J.P)

(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர், அச்சுவேலி)



**பாசத்தின் உறைவிடமே...
குடும்பத்தின் ஒளிவிளக்கே
விண்ணக வாழ்வுக்கு விரைவாய்
விரைந்திட்ட விதைமரமே - நீ
மறைந்துசென்று ஒரு மாதமும்
சென்றுவிட்டதையா - உம்
ஆத்மா சாந்தியடையட்டும்.**

*கடந்த 25.06.2009 வியாழக்கிழமை அன்று சிவப்பேறு பெற்ற எமது குடும்பத் தலைவரின் இறுதிப்பயணத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.07.2009) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

ஆஸ்பத்திரி வீதி, தோப்பு, அச்சுவேலி.

மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் இலக்கியம் - ஓர் அறிமுகம்

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கானது



சு.குணேஸ்வரன்
ஆசிரியர்,
[illegible]

ஈழத்தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியாகவும் அதன் இன்னொரு கட்ட வளர்ச்சியாகவும் புலம்பெயர் தமிழ் இலக்கியம் திகழ்கின்றது. ஈழத்தமிழ் இலக்கியம் இதுவரை எதிர்கொள்ளாத பல புதிய பிரச்சினைகளும் வாழ்வனுபவங்களும் இந்த இலக்கியத்துக்கு ஊடாகப் பேசப்படுகிறது. இந்த இலக்கியத்தின் உள்ளடக்கம் ஈழத்தமிழ்ப் படைப்புலகுக்குப் புதிதாக அமைகின்ற அதேவேளை உருவத்திலும் பல மாறுதல்களை வேண்டி நிற்பதாக அமைந்துள்ளது.

### சொற்பிரயோகம்

புலம்பெயர்வு என்பது ஒரே அரசியல் பூகோள எல்லையை விட்டுப் பெயர்ந்து சமூக, அரசியல், பண்பாட்டுச் சூழ்நிலைகளால் பெரிதும் வேறுபட்ட பிரதேசத்தில் வாழ நேரிடுகிறவர்களைக் குறிக்கின்றது. இவ்வாறு அரசியல், சமூக, பண்பாட்டு அம்சங்களில் பெரிதும் வேறுபட்ட நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்களால் படைக்கப்படும் இலக்கியங்களையே இங்கு புலம்பெயர் இலக்கியம் அல்லது புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற சொற்றொடர் கொண்டு அழைக்கின்றோம். இதனை ஆங்கிலத்தில் **Diaspora Literature** எனக் குறிப்படுவர்.

### ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகள்

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் இன்று உலகமெங்கும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வடஅமெரிக்காவில் கனடாவிலும் மற்றும் அவுஸ்திரேலியாவிலும் மிக அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். இன்றைய கணிப்பின்படி ஏறத்தாழ ஆறு லட்சத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்வதாகக் கணிக்கப்படுகிறது. இந்நாடுகளில் இருந்து ஈழத்தமிழர்கள் படைக்கும் படைப்புக்களே புலம்பெயர் இலக்கியம் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

### கால வரையறை

இலங்கையிலிருந்து 1960களில் இருந்தே ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வு ஆரம்பமாகின்றது. அக்காலத்தில் மலேசியா, அமெரிக்கா, லண்டன் எனத் தொழில் காரணமாக ஆங்கிலக் கல்வியினூடாக வந்தவர்கள் அதிகம் புலம்பெயர்ந்தனர். ஆனால் 80களுக்குப் பின்னர் பெருமளவாகப் புலம்பெயர்ந்த தமிழர்களால் படைக்கப்படும் இலக்கியங்களே புலம்பெயர் இலக்கியம் என்ற சொற்றொடருக்கு அர்த்தத்தை ஏற்படுத்தியதாகும்.

எனவே 1983 ஜூலைக் கலவரங்களின் பின்னர் இலங்கையிலிருந்து வெளியேறிய ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வே இங்கு முக்கியமானதாகும். இற்றைக்கு இரண்டு தசாப்தங்களைக் கடந்துவிட்ட பின்னரும் தொடர்கின்ற இந்நிலை தமிழர்களின் வாழ்வின் மத்தியிலும் அவர்களின் இலக்கியப் படைப்புக்களின் மத்தியிலும் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றமை அனைவரும் அறிந்த ஒன்றே.

### புலம்பெயர் படைப்புக்கள்

புலம்பெயர் படைப்புக்களில் கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய இலக்கிய வடிவங்களே முக்கியமானவையும் கவனத்திற்கு உரியவையும் ஆகும். இவை தவிர ஏனைய கலை இலக்கிய முயற்சிகளாக பின்வருவனவும் நடந்தேறி வருகின்றன. அவற்றுள் நாடகம், சஞ்சிகை - பத்திரிகை வெளியீடுகள், நூல் வெளியீடுகள், ஒலி, ஒளி செயற்பாடுகள் மற்றும் தமிழர் தம் அடையாளத்தைத் தக்கவைக்கும் கலாசார செயற்பாடுகள் என்பன முக்கியமானவை.

[தொடரும்...]

# பொய்யாகிப் போன பொய்க்கால் குதிரையாட்டம்

உமா மகேஸ்வரி,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மனித அசைவுகளும் குதிரையின் அசைவுகளும் இணைந்த இரு நிலை அசைவுகளைக் குதிரையாட்டத்தில் காணலாம். தமிழரின் வரலாற்றிலே தமிழரின் போர் ஆடல் வகையிலடங்கும் ''மல்லுக் கூத்து'' படிப்படியாக மறைந்துவிட்டதை அறிவோம். எனினும் இவ்வாடலின் சிலவகை ஆட்டத்தன்மை களைத் குதிரையாட்டத்தில் காணலாம். துள்ளல், தாவல், திரும்புதல், சுற்றுதல், ஓடல், கெந்துதல், ஏறுதல், வளைதல், சிலையாக நிற்றல் என எல்லா அசைவு களையும் இதில் ஒருசேரக் காணலாம். அசைவுகளில் இலாவகம், அலங்காரம், வேகம், கம்பீரம் கலந்துவரும் உத்வேகம் நிறைந்த கதைகளுக்கான ஆடல்களைப் பார்க்கும்போது மிகவும் பயங்கரமாக இருக்கும். கட்டப் பொம்மன் கதை, மதுரை வீரனின் வீரச் செயல்கள், சத்ரபதி சிவாஜியின் வீரச்செயல்கள் போன்றவைகளை ஆடும்போது மிகவும் வேகமாகவும் உக்கிரமாகவும் சில இடங்களில் ஜனங்களுக்கிடையில் ஓடியும் வெருட்டியும் ஆடுவர். இவற்றைவிட புராண, இதிகாசக் கதைகள் முழுமையாகவும் பகுதியாகவும் ஆடப்பட்டு வந்தன.

இவ்வாட்டத்தினை ஆடுபவர்கள் லாவகமான உடலும், குதிரையைத் தாங்கும் திறனும், மிதமான இசை ஆர்வம் நிரம்பப் பெற்றவர்களாக இருப்பர். ஆரம்பத்தில் பெண்குதிரைகளை ஆண்களே, பெண்வேடம் புணைந்து ஆடிவந்தாலும், இன்று பெண்களே பெண் குதிரைகளாக ஆடி வருவது வரவேற்கத்தக்கது. இக் குதிரைகளைப் பொதுவாக ராஜா, ராணிக் குதிரைகள் என்றும் கூறுவர்.

ஆண்குதிரைகள் வெள்ளை அல்லது



மஞ்சள் வண்ணத்திலான பாவாடை அணிந்திருக்கும் நெற்றியில் மஞ்சள் பொட்டும் இட்டிருக்கும். பெண் குதிரை சிவப்பு வண்ணப் பாவாடையும், நெற்றியில் சிவப்பு வண்ணப் பொட்டும் அணிந்திருக்கும். குதிரை யாட்டம் ஆடுபவர்கள் இடுப்பிற்கு மேலே தம்மை ராஜா, ராணி போன்று அலங்கரித்திருப்பர். இடுப்பிற்கு கீழே குதிரை மறைப்பதால் ஒப்பனை தேவையற்றது. காலில் 3-5 அங்குல நீளமுள்ள மரக்கட்டையைக் கட்டி ஆடுவர். தமது சொந்தக் காலில் ஆடாமல் மரத்தாலான பொய்யான காலில் ஆடியதாலேயே இது பொய்க்காற் குதிரையாட்டம் என அழைக்கப்படுகிறது. காலில் கட்டை கட்டி ஆடினால் தான் அது குதிரையாட்டம். இல்லையேல் அது கழுதை யாட்டம் என்பர் அனுபவம் மிகுந்த கலைஞர்கள்.

நையாண்டி மேளம் இதன் முக்கிய பக்கவாத்திய மாகும். அதைவிட ராஜாக்கள் காலத்தில் பயன்படுத் தப்பட்டு வந்த ராஜகுந்தலம் என்னும் இசைக்கருவியும், அதைவிட உடுக்கு செம்பறை, மத்தளம், குழல், ஒத்து தாளம் சக்கை, சேமக்கலம் போன்ற இசைக் கருவிகள் பக்க வாத்தியங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆரம்பகாலங்களிலே பொய்க்காற் குதிரையாட்டம் ஆலயத்திருவிழாக்கள், அரண்மனைக் களியாட்டங்கள், போன்ற பல இடங்களிலும் ராமா சபாக்களிலும் பெரிதும் விரும்பி ஆடப்பட்டது. வருடம்தோறும், மாதந்தோறும், கிழமைதோறும் ஆலய விசேட தினங்களில் ஆடப்பட்டது. ஆனால் இன்றைய நிலையில் வருடத்தில் ஒரு முறையாவது இவ்வாட்டத்தைக் காண்போமா என்பது ஐயமே.

(தொடரும்...)

# பலாத்கார மத மாற்றத்தைக் கண்டு மனம் வருந்திய பாவலர் துரையப்பாபிள்ளை





[சென்றவாரத் தொடர்ச்சி...]

புதிய இந்துப் பாடசாலை ஆரம்பமாகிய பின்னர் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்குச் [இன்றைய யூனியன் கல்லூரி] சென்ற பாடசாலைப் பரிசோதகர் வெறிதே இருப்பதைக் கண்டு ஆத்திரப்பட்டார். இதனால் புதிய இந்துப் பாடசாலையை பதிவுசெய்வதில்லையென்று உறுதியெடுத்துக் கொண்டார். இதனால் இந்துப் பாடசாலை மாணவர்கள் பொதுப் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலையேற்பட்டது. ஆனால் அதிபர் மணந்தளர வில்லை. தானாக யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த கலீவிமான்களைக் கொண்டு பரீட்சையை ஸ்தாபித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபரான சிவராவ், இராமநாதன் கல்லூரி உப அதிபர் சுவாமிநாதன், பரியோவான் கல்லூரி அதிபர் ரி.எச்.குறோசர், விக்டோரியாக் கல்லூரி அதிபர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் ஆகியோர் இப்பரீட்சைச் சபையில் அங்கம் வகித்தனர். இவர்கள் வழங்கிய சான்றிதழ்களுக்கு அரசாங்க சான்றிதழ்களை விடக்கூடிய கௌரவம் கிடைத்தது. இலங்கையில் மட்டுமல்ல மலேசியா, சிங்கப்பூரிலும் மிகுந்த செல்வாக்கிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மிசனரிமார் தெல்லிப்பழையில் மிகவும் செல்[illegible] ஒருவரைத் தங்கள் பாடசாலை ஆசிரியராக்கி மாணவர்களைக் [illegible] முயற்சிகளை முறியடிக்க முயற்சித்தனர். ஆனால் எல்லாவற்றிலும் மேலாக அம்மக்களின் தன்மானம் உறுதியாக இருந்தபடியால் பாவலரின் முயற்சி வெற்றியளித்தது.

கேம்பிரிட்ஜ் கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் பதிவு செய்த பாடசாலை மூலமே விண்ணப்பிக்க முடியும். எனவே மாணவர்களை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஊடாக விண்ணப்பிப்பதற்கு ஒழுங்குகளைச் செய்து வெள்ளிக்கிழமைகளில் மட்டும் மாட்டுவண்டில்களில் அப்பாடசாலைக்குச் செல்வார்கள்.

எனினும் சிலர் வஞ்சகத்தோடு இது பற்றி முறைப்பாடு செய்தபடியால் ஒருமுறை விக்டோரியாக் கல்லூரியில் இருந்து மாணவர்கள் தோற்றமுடியாது போய்விட்டது. ஆனால் அடுத்த ஆண்டு வட்டு. இந்துக் கல்லூரி கைகொடுத்தது. இறுதியாக 8 ஆண்டுகளின் பின்னர் 1916ஆம் ஆண்டு பாடசாலை பதிவு செய்யப்படாமலேயே அரசாங்கப் பரீட்சை எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.


க.செங்கதிரோன்,
(மகாஜனக் கல்லூரி
பழைய மாணவன்)

1918ஆம் ஆண்டு முறையாகப் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரச உபகாரப் பணம் ரூபா1473 பாடசாலைக்குக் கிடைத்தது. இன்று ஈழமணித் திருநாட்டில் எந்தவொரு படசாலைக்கும் 2வது பாடசாலையாக அமையாது பல்வேறு இடம் பெயர்வுகளைச் சந்தித்தும் வீறுநடை போடுகிறாள் மகாஜன அன்னை. அக்கருமவீரனின் நினைவுதினம் 24.06.2009 அன்று விமரிசையாக [illegible] கொண்டாடப்பட்டது.

[முற்றும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சமுத்திரத் திரவியம் (Ocean Wealth)
உரிமையாளரும், பிரபல வர்த்தகருமாகிய

## போடியார் முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி

(பங்கர் அப்பா)

மலர்வு 22.11.1942

உதிர்வு 06.08.2008

திதி: 26.07.2009

அன்பின் ஊற்றாய் பாசத்தின் உறைவிடமாய்
பார் போற்ற வாழ்ந்த தெய்வமே!
காலனவன் கையில் அகப்பட்டு ஆண்டொன்று ஆனதுவோ!
இன்பமெனும் முத்தெடுத்து இதயமெனும் கோயில் கட்டி
பார் போற்ற வாழ்ந்த அன்பு குலவிளக்கே! - நீர்
எம்மை விட்டுப் பிரிந்தது விதியோ?
ஆண்டுகள் பல கோடி கடப்பினும்
இதயத்தின் கருவூலத்தில் என்றும் வாழ்வீர்.

எமது குடும்பவிளக்கின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (26.07.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஊறணி, வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படங்கள் தரும் பதிவுகள்





தேசிய ஆவணமாக்கல் சபையால் வடமாகாணத்தில் சிறந்த நூலகமாக சுன்னாகம் பொதுநூலகம் தெரிவுசெய்யப்பட்டமையைக் கௌரவித்து நடத்தப்பட்ட விழாவில் நூலக ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், வலி.தெற்குப் பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் ஆகியோருடன் கௌரவிக்கப்பட்டோர் எடுத்துக்கொண்ட படம். (302)



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த ஆதரவற்ற சிறார்களுக்கு உதவுமுகமாக அச்சிறுவர்களை ஆதரவளித்து நடத்தும் வவுனியா நீதிமன்றத்தில் இயங்கும் சட்டத்தரணிகள் சங்கத்துக்கு பொலிகண்டி கந்தவன ஆலய அன்னதான சபை, கந்தவன ஆலய 9ஆம் திருவிழா சபை என்பன இணைந்து முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபாவை ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக் கிளை மூலம் அனுப்பிவைத்தனர். (படம்: சுந்தா)






புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் ஆங்கில தின விழாவில் யாழ்.வலய ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் சி.தயாகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவதையும் அங்கு இடம்பெற்ற கலைநிகழ்வின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.



வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மனையியல் போட்டி அண்மையில் மருதனார்மடம், இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றபோது மாணவர்களது ஆக்கங்களை வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (112)



கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தின் 'திருஞானம் செய்தி மடல்' வெளியீடு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தம் இதழ் ஆசிரியர் திருமதி ல.முகுந்தனிடமிருந்து நூலினைப் பெற்றுக்கொள்வதையும் அருகில் பாடசாலை அதிபர் வ.நடராசா நிற்பதையும் படத்தில் காணலாம்.



கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபையின் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உபஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பிரதி மாவட்டப் பொருளாளர் லயன் எஸ். எஸ். தங்கராசா, பிரதி மாவட்ட செயலாளர் லயன் எஸ்.சிவராஜேஸ்வரன், மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர் எஸ்.தியாகராஜா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.



யாழ்.கனகரத்தினம் ம.ம.வியின் பழைய மாணவர் சங்க அலுவலகத் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் யாழ்.பிரதா[illegible] யாளர் வ.சண்முகநாதமுதலியை கல்லூரி அதிபர் வி.மாணிக்கம், [illegible] கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபருமான வி. கே. கணபதிப்பிள்ளை ஆகியோரால் அழைத்துவரப்படுகின்றனர்.



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு பட்டின உப - அலுவலகத்தினால் புத்தகக் கண்காட்சியும், சுனாமி பத்திரிகை நறுக்குக் கண்காட்சியும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்டன. கண்காட்சி மண்டபத்தை கல்லூரியின் [illegible]சிவராசா நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும் பத்திரிகை [illegible]காட்சியை ஒழுங்கு செய்திருந்த ஓய்வுபெற்ற நூலகர் மா.கணேசபிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் வே.சிவசுந்தரத்தால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி ஆசிரியருக்கான கணனிப் பயிற்சிநெறி பிற்போடப்பட்டது

வடமராட்சி வலயப் பாடசாலைக் கணனிக் கற்கை நிலையங்களில் நடைபெற்றுவரும் ஆசிரியர்களுக்கான அடிப்படைக் கணனிப் பயிற்சிநெறி இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை, ஓகஸ்ட் முதலாம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் நடைபெறாது எனவும் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இக்கணனிப் பயிற்சிநெறி நடைபெறும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201)

# ஏ.பி. செய்தியாளருக்கு வீசா மறுப்பு; சர்வதேச ஊடக அமைப்பு விசனம்

கொழும்பு, ஜூலை 25

'அசோசியேட்டட் பிரஸ்' (ஏ.பி.) செய்திச் சேவையைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் ரவி நெஸ்மனின் விசாவை நீடிக்க மறுத்தது தொடர்பாக இலங்கை அரசு உரிய விளக்கம் அளிக்கவேண்டுமென்று எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்புக் கோரியுள்ளது.

மனித உரிமைப் பணியாளர்களுக்கும் வைத்தியர்களுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வந்த இலங்கை அரசு, தற்போது இலங்கையில் இடம்பெறும் மனிதப் பேரவலம் குறித்து எழுதும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் முனைப்புடன் செயற்பட ஆரம்பித்து விட்டது என்றும் அவ்வமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இது குறித்து, எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கபட்டுள்ளவை வருமாறு:-

அமெரிக்கப் பிரஜையான ஊடகவியலாளர் ரவி நெஸ்மன் அசோசியேட்டட் நிறுவனத்தின் சார்பாக 2007 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்திருந் தார். தற்போது அவருடைய விசாவை அரசு புதுப்பிக்க மறுத்த நிலையில் கடந்த 20ஆம் திகதி இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டார். ஆனால் இலங்கையின் ஜனாதி பதி செய லகத்தில் சர்வதேச ஊடகங்கள் பணிப்பாளராகக் கடமையாற்றும் எல்.ராஜ கருணாநாயக்க சர்வதேச ஊடகவியலாளர் நெஸ்மன் ரவியைத் திட்டமிட்டு நாட்டை விட்டு வெளியேற்றவில்லையென வும் ஒரு வெளிநாட்டு ஊடகவியலாளர் இலங்கையில் இரு வருடங்களுக்கே கடமையாற்ற அரசால் தற்போது அனுமதிக்கப்படுகிறார் என்றும் கூறியுள்ளார்.

ஆனால் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கையில் இரு வருடங்களுக்கே கடமையாற்ற அந்நாட்டு அரசினால் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது தற்போதுதான் முதல் தடவையாக எமக்குத் தெரியவந்துள்ளது. இலங்கை அரசின் இந்நிலைப்பாடு வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் பணிக்குப் பாரிய இடையூறாக அமையும்.

மனித உரிமைப் பணியாளர்களுக்கும் வைத்திய கலாநிதிகளுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வந்த இலங்கை அரசு தற்போது இலங்கையில் இடம்பெறும் மனிதப் பேரவலம் குறித்து எழுதும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் முனைப்புடன் செயற்பட ஆரம்பித்து விட்டது. இது மிகவும் துரதிஷ்டமான சூழ்நிலையாகும். வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் 9 பேர் இலங்கை அரசால் இவ் வருடம் மாத்திரம் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு கட்டாயப் படுத்தப்பட்டுள்ளார்கள். உள்ளூர் ஊடகவியலாளர்கள் 30 பேர்வரை கடந்த ஓராண்டு காலத்துக்குள் நாட்டை விட்டு வெளி யேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் -என்று உள்ளது.

(அ-சி)

## சேவைநலன் பாராட்டு விழா



யா/புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபராக சேவையாற்றி ஓய்வுபெற்ற

**திரு. க. தர்மகுணசிங்கம்**
(B.Com., Dip. in Ed., S.L.P.S.)
அவர்களின்
சேவை நலன் பாராட்டு விழா
வைபவம்

காலம்: இன்று (25.07.2009)
சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி
இடம்: புங்குடுதீவு மகா வித்தியாலய
பிரதான மண்டபம்
தலைமை:
ச. கணேஸ்வரன் (அதிபர்)

### சேவை விவரம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் சேவை | - 01.01.1981 - 24.10.1985 | - கமு/தம்பிலுவில் ம.வி., தம்பிலுவில் |
| ஆசிரியர் சேவை | - 25.10.1985 - 12.05.1988 | - யா/கரம்பன் சண்முகநாத ம.வி., ஊர்காவற்றுறை |
| ஆசிரியர் சேவை | - 13.05.1988 - 14.01.1994 | - யா/புங்குடுதீவு ம.வி., புங்குடுதீவு |
| பிரதி அதிபர் | - 15.01.1994 - 03.08.2000 | - யா/புங்குடுதீவு ம.வி., புங்குடுதீவு |
| அதிபர் சேவை | - 04.08.2000 - 01.05.2009 | - யா/புங்குடுதீவு ம.வி., புங்குடுதீவு |

**ஓய்வுபெற்ற எமது அதிபர் தமது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.**

யா/புங்குடுதீவு ம.வி.
புங்குடுதீவு

அதிபர், ஆசிரியர்கள்,
1999 O/L மாணவர்கள்.

# யாழ்., வவுனியா நகரசபைத் தேர்தலில் அரசுக்கு 80 வீத வாக்குகள் கிடைக்கும்

## இதுவரை வன்செயல்கள் இடம்பேறவில்லை-அமைச்சர் யாப்பா

கொழும்பு, ஜூலை 25

வடக்கில் யாழ்ப்பாண மாநகர சபைக்கும் வவுனியா நகரசபைக்கும் நடைபெறவுள்ள தேர்தல் எல் லாத் தேர்தல்களையும் விட அமைதியான முறையில் நடைபெறும். அதில் அரசுக்கு 80 வீதமான வாக்குகள் கிடைக்கும்.



- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன்யாப்பா அபேவர்தன நம்பிக்கை தெரிவித்தார். தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

குறிப்பிட்ட தேர்தல் தொடர்பான விசேட கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அழைப்பு விடுத்தி ருந்தார்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் அனைவருக்கும் இதில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட தேர்தல்கள் தொடர்பாக ஐக்கியதேசியக் கட்சியால் பொறுப்பு வாய்ந்த நபராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் ஜயலத் ஜயவர்தனவும் இதில் கலுந்து கொண்டதுடன் வடக்கின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

வடக்கில் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான வன்செயல்கள் இடம்பெற்றமைக்கான முறைப்பாடுகள் எதுவும் இக்கூட்டத்தின்போது தெரிவிக்கப்படவில்லை. அதன்படி இதுவரை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா தேர்தல் தொடர்பாக வன்செயல்கள் இடம்பெறவில்லை என்பது புலனாகிறது - என்றார்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08.10.1939 மறைவு 01.08.2003



அமரர்
**சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**
(பங்குதாரர், நியூ சோபிதா நகை மாளிகை)
திதி: 25.07.2009

**அன்பைப் பொழிந்து பண்பை உணர்த்தி**
**எம்மை ஆளாக்கிய அப்பாவே!**
**ஆண்டுகள் ஆறு ஆகியும்**
**ஆறவில்லை எம் துயரம்**
**என்றும் பிரார்த்திப்போம் ஆத்ம சாந்திக்காய்.**

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
"திருவேரகம்",
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

நியூ சோபிதா நகை மாளிகை,
7 4/1.. (184), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## அறிவொளி முன்பள்ளியின் விளையாட்டு விழா

ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வண்ணை ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் த.மயூரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி வே.ஞானகாந்தன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் திருமதி புஸ்பவதி சண்முகராஜா, முன்பள்ளி மேற்பார்வையாளர் செல்வி கார்த்தியாஜினி சிவராசா ஜே/88 கிராமசேவகர் எஸ். ரவீந்திரதாஸ், ஜே/99 கிராமசேவகர் எஸ். நவரட்ணம் ஆகியோர் கலந்துகொள்வர். (201)

## கருத்தரங்கு

"சிங்கர்" நிறுவனத்தின் அனுசரணையில் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ம.சின்னத்தம்பி கருத்துரைகளை வழங்கவுள்ளார்.

பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய விடயங்கள், பரீட்சை எழுதும் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் தீர்வுகளும் ஆகிய [illegible] கருத்துரைகள் இடம்பெறும். (201)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 . 12 . 1952 இறப்பு 04 . 08 . 2008



**வேலுப்பிள்ளை திருச்செல்வம்**

பாசமும் பரிவும் காட்டிய பண்பின் சிகரமே!
நேசத்துடன் வாழ்ந்து மறைந்து விட்டீர்களே
அன்பைக் காட்டி அறிவையூட்டிய அன்புத் தெய்வமே!
உம் பிரிவால் துவண்டு கதிகலங்கிப் போனோமே
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயம் உள்ளவரை உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில்....

அந்திரான்,
கரவெட்டி வடக்கு.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி- மாலினி,
பிள்ளைகள்- யாதவன், வைஷ்ணவி, கார்த்தீபன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பராசக்தியை வழிபடுவதற்கு உகந்த தினங்களில் ஒன்று ஆடிப்பூரம்



அன்னை பராசக்தியை வழிபடுவதற்குரிய விசேட தினங்கள் பல. அவற்றுள் ஒன்று ஆடிமாதத்தில் வரும் பூர நட்சத்திர தினமாகும்.

எல்லா நாள்களும் இறைவழிபாட்டிற்குரிய நாள்களேயாயினும், குறிப்பிட்ட சில நாள்கள் அம்பிகை வழிபாட்டிற்குரிய சிறப்பினைப் பெறுகின்றன. அந்த வகையிலே ஆடிப்பூரத் திருநாள் அம்பிகைக்குரிய சிறந்த வழிபாட்டுத் திருநாளாகும்.

"அகிலாண்ட கோடியீன்ற அன்னையே- பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூப மயிலே....

என்பது தாயுமானவர் பாடல். தாய்மை என்பது அன்பு. அன்பின் முழு வடிவமே தாய். எவ்வுயிர்க்கும் தாயாகிய அம்பிகை தன் அருட்பார்வையால் அகிலம் அனைத்தையும் காத்து இரட்சிக்கின்றாள்.

இவ்வாறு தாயான தத்துவமாய் விளங்கும் அம்பிகையைக் கன்னி என்றும் மறைகள் போற்றுகின்றன. "அழியாத கன்னிகை" என்றார் அபிராமிப் பட்டர். மணங்கமழ் தெய்வத்து இளநலத்தோடு என்றும் கன்னியாய்த் திகழ்பவள் அன்னை பராசக்தி என்ற மேலான தத்துவத்தை விளக்கி நிற்பதற்காகவே "பூரகர்மா" என்ற ஓர் அரிய வழிபாட்டு நிகழ்வினை அம்பாள் ஆலயங்கள் தோறும்; ஆடிப்பூரத் தினத்தில் அந்தணப் பெரியோர்கள் நிகழ்த்தி வைக்கின்றனர். ஆடிமாத பூர நட்சத்திரத்தன்று நடைபெறும் "பூரகர்மா" என்ற ருது சோபன விழா நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலும் வருடம் தோறும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு இன்று (25.07.2009) சனிக்கிழமை நயினை நாகபூஷணி அம்மனுக்கு பூரகர்மா விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆடிப்பூரத் தினத்திலே அம்பாளுக்கு ருதுசாந்தி வைபவம் இடம்பெறும். விசேட திரவியங்களாலும், பால், தயிர், இளநீர் இவற்றாலும் அம்பிகைக்கு அபிஷேகம் நடைபெற்று- அதாவது புனித நீராட்டு நடைபெற்று மங்கள ஆராத்தி எடுக்கப்படும். அதன் பின்னர் அம்பாளுக்கு "பூரகர்மா" என்ற ருது சாந்தி வைபவம் இடம்பெறும். இவ்வரிய கண்கொள்ளாக் காட்சியினைக் கண்டு களிப்பதற்கு ஆயிரமாயிரமாய் அடியார்கள் நயினைக்கு வருகின்றனர். நாகபூஷணியின் அருட்கோலம் கண்டு மகிழ்கின்றனர். அவள் அருள் மழையில் குளித்து தம் பாவமெல்லாம் தொலைத்துப் பேரானந்தம் அடைகின்றனர். பூரகர்மா நிகழ்வின் பின்னர் அம்பிகைக்கு திருமாங்கல்ய தாரணமும், சுமங்கலி பூசையும் இடம்பெறு கின்றன.

## இன்று ஆடிப்பூரம்

ஆடிப்பூர விழாவில் அம்பாள் நாகபூஷணியாக அழகிய தாமரைப்பூ மீது அமர்ந்து திருவூஞ்சலாடி, வீதியுலா வரும் அருட்காட்சி கண்டு களித்தவர்கள் பேரின்பப்பேறு பெற்றவர்களாவார்கள்.

திருமதி தவமணி சாரநாதன்,
ஓய்வுபெற்ற அதிபர், நயினாதீவு.

# நிர்வாகிகள் தெரிவு

நவாலி, ஜூலை 25

ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

தலைவராக க.தங்கவேலாயுதம், உப தலைவராக த.கணேசலிங்கம், செயலாளராக மா.மகாலிங்கம், உபசெயலாளராக சி.மரிய றோசலி, பொருளாளராக க.ஜெயந்தி ஆகியோரும் -

இத்துடன் 6 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9-100)

* * *

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேச ஆயுள்வேத பாதுகாப்புச் சபை அங்குரார்ப்பணக் கூட்டம் உதவிப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நடப்பாண்டுக்கான நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவராக க.சுரேஷ்குமார், உப தலைவர்களாக என்.சத்திவேல், திருமதி ரஞ்சிதா ஆகியோரும் செயலாளராக க.சிவஞானசுந்தரம், உப செயலாளராக எம்.செல்வநாதன், பொருளாளராக திருமதி மேகலாவும் மற்றும் ஏழு பேர் கொண்ட நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9-86)

* * *

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலரும் இணைப்பாளருமான எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற ஆயுள்வேத பாதுகாப்புச்சபை மாநாட்டில் புதிய இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக டாக்டர் வைத்திலிங்கம் வரதலிங்கம், செயலாளராக டாடகர் வெற்றிவேல் சக்திவேல், பொருளாளராக டாக்டர் சு.துஷ்யந்தி, பிரதித் தலைவர்களாக பொ.வேலாயுதம், சி.அருளானந்தம், பிரதிச் செயலாளராக சி.சுப்பையா, கணக்காய்வாளராக டாக்டர் வ.பாமினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (203-28-29)

# மனித உரிமை பேணலுக்கான செயற்றிட்டம் விரைவில்

கொழும்பு, ஜூலை 25

மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், சித்திரவதை மற்றும் காணாமல் போதலைத் தடுக்கவும் அரசு விரைவில் செயற்திட்டமொன்றை அறிவிக்கவுள்ளது என மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்த அவர், சித்திரவதை மற்றும் காணாமல் போதலை குறைப்பது - தடுப்பது - முற்றாக இல்லாமல் செய்வது போன்றவற்றில் இலங்கை அரசுக்கு உள்ள உறுதியை இந்தச் செயற்திட்டம் புலப்படுத்தும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட மா அதிபர் மோஹான் பீரிஸ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மனித உரிமை செயலணிக் குழு விரைவில் இந்தச் செயற்திட்டங்களை உருவாக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (25)

# பன்றிக் காய்ச்சலும் மருத்துவ பிரச்சினைகளும்

பன்றிக் காய்ச்சலானது ஒரு வகை இன்புளுவென்சா வைரஸினால் ஏற்படுகின்றது. இன்புளுவென்சா $A(H_1N_1)$என்ற வைரஸே இந்நோய்க்கான காரணி என்பது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில் மெக்சிக்கோவில் இனங்காணப்பட்ட பன்றிக் காய்ச்சலானது இன்று அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நெதர் லாந்து, சுவிற்சர்லாந்து, ஜப்பான், பெரு, பிரித்தானியா, சிலி, இலங்கை, இந்தியா போன்ற பல நாடுகளையும் தாக்கி மருத்துவ உலகுக்கு சவாலாக அமைகின்றது. ஹொங் கொங்கில் பாடசாலைகள் பன்றிக் காய்ச்சல் தாக்கத்தால் மூடப்பட்டன. பன்றிக்காய்ச்சல் மனித மரணங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இது உயிர் கொல்லி நோயாகக் கருதமுடியாது. மேலும் பன்றிக் காய்ச்சல் நோய்க்கிருமியானது அதன் தாக்கும் வழி முறைகளை மாற்றக் கூடியது என்பதால் அவதானம் தேவை. உலக சுகாதார நிறுவனமானது பன்றிக் காய்ச்சலை (Swine Flu) பூளோக கொள்ளை நோய் பரவல் என்று பிரகடனப்படுத்தியுள்ளது.

சர்வதேச போக்குவரத்து உலக நாடுகளில் இந்நோய் பரவுவதற்குக் காரணமாக அமைகின்றது. இந்தியாவில் 260 நபர்களும் இலங்கையில் 18 நபர்களும் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளர். A-9பயணிகள் போக்குவரத்து ஆரம்பித்த பின்னர் யாழ்ப்பாணத்திலும் இந்நோய் பரவலாம் என்பதால் அந்நோய் பற்றி அறிந்து கொள்வதும் நோய் பரவாமல் ஏற்படுத்தக் கூடிய தடுப்பு முறைகளையும் அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

இந்நோய் ஏற்படும்போது இன்புளுவென்ஸ் காய்ச்சல் ஏற்படுவது போன்ற அறிகுறிகள் காணப்படும். மேலும் அதி கூடிய காய்ச்சல், தடிமன், மேல்மூச்சு வாங்கல், பசியின்மை, தொடர்இருமல், தும்மல், உடல்வலி, அதீத களைப்பு, தலைவலி, சுவாசப்பை அழற்சி போன்ற அறிகுறிகள் காணப்படின் மருத்துவ ஆலோசனை பெறப்படவேண்டும். மேலும் வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். பன்றிக் காய்ச்சலானது மனிதர், காற்று, பன்றி, பறவை ஆகியன மூலம் பரவலடையலாம் எனக் கருதப்படுகின்றது. பன்றிக் காய்ச்சலால் தாக்கப்பட்ட குழந்தைகள் இருவாரங்களுக்கு நோயைக் பரப்பக் கூடிய சாத்திய கூறுகள் காணப்படுகின்றன. பன்றிப் பண்ணைகளில் தொழில் புரிகின்ற நபர்களுக்கு இந்நோய்த் தாக்கம் ஏற்படலாம் எனவும் கருதப்படுகின்றது.

தடுப்பு முறைகள்

குழந்தைகளின் காய்ச்சல் அதிகரிக்கும் போது வலிப்பு ஏற்படலாம். இதைத் தவிர்ப்பதற்கு சாதாரண நீரைப் பயன்படுத்தி குழந்தையின் உடலை ஒற்றுதல் வேண்டும். இதற்கு குளிர்ந்த நீரோ அல்லது இளஞ்சூட்டு நீரோ பாவிப்பதைத் தவிர்த்தல் வேண்டும். கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவுதல் வேண்டும். இருமும் போதும் தும்மும் போதும் நோய்க்கிருமியானது காற்றில் கலந்து மற்றவர்களுக்குப் பரவுவதால் கைக்குட்டையைப் பாவித்தல் வேண்டும். அசுத்தமான கையினால் மூக்கு, வாய், முகம் ஆகியவற்றைத் தொடுவதைத் தவிர்த்தல் நன்று. மக்கள் அதிகமாகக் கூடு கின்ற இடங்களைத் தவிர்த்தல், நோய் அறிகுறிகள் காணப்படும் போது தகுதியான மருத்துவரிடம் ஆலோசனையும் சிகிச்சையும் பெறுதல் போன்ற தடுப்பு முறைகளைக் கையாள்வதுடன் நோய்பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் செல்பவர்கள் வாய், மூக்கு ஆகியவற்றை துணியால் (Mask)கட்டுதல் வேண்டும். பன்றிக் காய்ச்சல் அதிகமாக உள்ள நாடுகளுக்குச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். நோயினால் பாதிக்கப்பட்டவரைத் தனிமைப் படுத்துவதுடன் ஏனைய பொதுமக்கள் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுடன் பழகுவதைத் தவிர்த்தல் வேண்டும். நோயாளி நோய்த் தாக்கம் உள்ள போது பாடசாலை, அலுவலகம் போன்றவற்றுக்கு வேலைக்குச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். நோய் ஏற்படாமல் இருப்பதற்கு போசாக்குள்ள உணவுகளை உள்ளெடுப்பது அவசியம். குழந்தைகளை நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். பொது நிகழ்ச்சிகளுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். பன்றிக் காய்ச்சல் அதிகாமாவுள்ள இடங்களில் திரையரங்குகளை குறித்த காலத்துக்கு மூடிவிடல் போன்ற நடவடிக்கைகளை எடுக்கலாம்.

டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்

# மரபு நெறிகளைத் தவறவிடுவது சரியன்று

தேவாரம் வேதசாரம் - எல்லாம் வல்ல இறைவனைத் துதித்துப் பாடப்பெற்ற தேவாரத் திருப்பதிகங்கள் சைவமக்களின் அரியசொத்து. சமயகுரவர்களான சைவநாயன்மார்களால் திருவாய் மலர்ந்து அருளிச் செய்யப்பெற்ற தேவாரத் திருப்பதிகங்கள் ஒவ்வொன்றும் தித்திக்கும் தேன்துளிச் சிதறல்கள். அவற்றைப் படிக்குந்தோறும் உள்ளம் உவகையால் துள்ளும்; பக்தி ரசம் ததும்பும்.

இத்துணை பெருமையும் அருமையும் நிறைந்த தேவாரம் தூய்மையோடும் பக்தியோடும் பிழையின்றிப் பண்ணோடு பாடப்பட வேண்டும். இன்றைய கால கட்டத்தில் ஒருசில ஆலயங்களைத் தவிர அதிகமான ஆலயங்களில் இந்தத் தேவாரம் படும்பாட்டைப் பார்க்கும்போதும் கேட்கும்போதும் மிகுந்த வேதனையை அளிக்கின்றது.

மக்கள் மன்றம்

பண்முறைகள் தவறியும் சொற்பிழைகள் மலிந்தும் ஒழுங்கு முறையின்றியும் ஓதப்படுகின்றன. பஞ்சபுராணம் என்றால் ஐந்து பாடல்கள் என்றே பொருள் கொள்ளப்படும். அதாவது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்ற ஐந்துமே பாடப்படவேண்டியது. ஈற்றில் பொதுநன்மை கருதி 'வான்முகில் வழாது பெய்க' என்ற வாழ்த்தும் சேர்க்கப்படுகின்றது. இதுவே சரியான முறையாகும்.

இதைவிட்டுவிட்டு வேறு எனனவெல்லாமோ சேர்த்துப் பாடப்படுவது தவறாகும். சில ஆலயங்களில் திருப்புகழ் சேர்க்கப்படுகின்றது. கால அவகாசத்தைக் கருத்திற் கொண்டு பார்க்கும்போது இது பரவாயில்லை. ஆனால் கூடுதலான இடங்களில் திருமந்திரம், அபிராமி அந்தாதி, கந்தர் அலங்காரம் எல்லாம் சேர்த்துப் பாடுகின்றார்கள். வசந்தமண்டபப் பூசையின் போது பஞ்ச புராணம் மட்டுமே பாடப்பட வேண்டும். வேறு பாடல் பாடக்கூடாது.

இது ஒருபுறமிருக்க,

சில இடங்களில் தேவாரத்துக்குப் பதிலாகத் திருமந்திரமும் ஓதப்படுகின்றது. 'ஐந்து கரத்தனை' என்ற பாடல் தேவாரமல்ல; அது திருமந்திரம். தேவாரம் பாடுவதன் நோக்கமே பிழைத்துப் போய்விடும். எனவே தேவாரம் பாடும் அடியார்கள் இதைக் கவனத்திற் கொள்ளவேண்டும். நாங்களும் பாடுகின்றோம் என்று சொல்லிக்கொண்டு மரபு நெறிகளைத் தவறவிடுவது முறையல்ல. எமது சைவப் பாரம்பரியமும் மரபு வழிவந்த நெறிமுறைகளும் எம்கண்முன்னாலேயே சிதைக்கப்படுவதை நாம் அனுமதிக்கக்கூடாது. பொதுவில் பார்த்தால் எல்லாவித குறைபாடுகளுக்கும் எமது கல்வி முறையே காரணமா இருக்கிறது. சைவ மன்றங்களுக்கு இஃது சமர்ப்பணம்.

- சிவநெறிக் கலாநிதி

# மக்கள் முகம்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் இரு கிராம உத்தியோகத்தர் சன்தரம் ஒன்றுக்குரிய பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

எஸ்.ஜீவராசா, திருமதி கே.லலிதாம்பாள் ஆகிய இருவருக்கும் பொதுநிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சினால் பதவியுயர்வுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (203-28)

* * *

கச்சாய் பிரிவுக்கு பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரர்க திருமதி வாசுகி பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கச்சாய் பிரிவு மக்கள் தமது பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொள்ளலாமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (9-302)

* * *

[illegible] (ஜே/321) பிரிவு கிராம அலுவலராக சுப்பிரமணியம் உலகநாதன் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இப்பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றிய க.சுந்தரராஜா இளைப்பாறியதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9-207)

* * *

மானிப்பாய் சத்தியசாயி சேவா நிறுவனத் தலவராக திருமதி பத்மினி வசந்தசேனன் நியமனம் பெற்றுள்ளார்.

மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை நிறைவேற்று அலுவலராகவும், சமூகத் தொண்டராகவும் திருமதி பத்மினி வசந்தசேனன் பணியாற்றி வருகின்றார்.

இதேவேளை சத்தியசாயி நிறுவனத் முன்னாள் தலைவராகப் பணியாற்றிய பசுமைப்புரட்சியாளர் வை.செகரராஜசிங்கம் மானிப்பாய் சத்தியசாயி மனித மேம்பாட்டு குழு இணைப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். (9-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 வீதியூடாக கொழும்பிலிருந்து யாழ்.செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்படவில்லை

## இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார தகவல்

கொழும்பு, ஜூலை 25

ஏ-9 வீதியூடாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிப்பதற்கான அனுமதி இதுவரையில் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படவில்லை. இந்நிலையில் கொழும்பிலிருந்து யாழ்.நோக்கிப் பயணிப்பவர்கள் உள்ளூர் விமான சேவையூடாகவோ அல்லது கப்பலூடாகவோதான் பயணிக்க வேண்டும் என்று இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

வெகுவிரைவில் ஏ-9 வீதியூடாக கொழும்பிலிருந்து யாழ். செல்வதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். இது தொடர்பில் இராணுவ பேச்சாளர் மேலும் கூறியதாவது:

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் பஸ் சேவை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 5 பஸ்களில் 210 பேர் யாழ்ப்பாணதிலிருந்து புறப்பட்டு கொழும்பை வந்தடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியானது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கான போக்குவரத்து சேவைக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ள போதிலும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை.

இதனால் ஏ-9 வீதியூடாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பொதுமக்கள் எவரும் பயணிக்க முடியாது. அதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் பட்சத்தில் போக்குவரத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தாவடி வடக்கு வீரபத்திரர் ஆலய அம்மனின் வருடாந்த ஆடிப்பூரத் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. (201)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 25

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நடை பெறும் ஆடிப்பூரத் திருவிழாவை முன்னிட்டு அமுதசுரபியில் விசேட அன்னதான நிகழ்வுகள் இடம்பெறும்.

ஆலயத்துக்கு வரும் அடியார்களின் பிரயாண வசதிகருதி அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு அன்னதானம் ஆரம்பமாகவுள்ளது. (201-224)

* * *

கொழும்புத்துறை மேற்கு பழனியாண்டவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமகி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். (201-224)

* * *

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தில் இன்று ஆடிப்பூரம் இடம்பெறும். அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் மற்றும் பூசை வழிபாடுகள் போன்றவை நடைபெறவுள்ளன. (201-224).

* * *

வலி.வடக்கு, ஜூலை 25

அளவெட்டி, கனேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204-86)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 25

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் திணங்கள் நடை பெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடை பெறும். (204-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 25

மீசாலை வெள்ளை மாவடி திருநீல கண்டப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை மறுதிணம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் திணங்கள் நடைபெறும்.

எதிர்வரும் நான்காம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204- 207)

* * *

குருநகர்,ஜூலை25

ஊர்காவற்றுறை சரவணை சின்னமடு மாதா யாத்திரைத்தல திருவிழாவிற்கான ஆரம்ப வழிபாடுகள் நாளை மறுதிணம் திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளன.

நாரந்தனை, சின்னமடு, சாட்டி, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, கரம்பன், எழுவைதீவு, ஊர்காவற்றுறைப் பிரிவு மக்கள் கலந்து கொள்ளும் நவநாள் ஆராதனைகள் இவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நாள்களில் தினமும் நடைபெறும். எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு திருவிழாவில் திருப்பலியும் நடைபெற உள்ளது.

இந்த யாத்திரைத் தல திருவிழாவில் பங்குபற்ற உள்ள மக்களுக்கு பஸ் பயண ஒழுங்குகள் மற்றும் ஆலயத்தில் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலயத்தின் பரிபாலகர் வண.பிதா யே. அ. அருள்தாசன் அடிகளார் தெரிவித்துள்ளார். (201- 51)




# நவாலி களையோடை கண்ணகை அம்மன் திருக்கோயில்

இன்று சனிக்கிழமை
ஆடிப்பூர உற்சவ நாளில்
உலகெங்கும் வாழும்
அனைத்து அடியார்களுக்கும்
கண்ணகை அம்மன் அருள் கிடைக்க
வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தில்லையம்பலம் அன் சன்ஸ்
உழவு இயந்திர உதிரிப்பாக விற்பனை நிலையம்.
(உரிமையாளரும் குடும்பத்தினரும்).
நவாலி அரசடிச்சந்தி,
மானிப்பாய்.


# மரண அறிவித்தல்

## கனகசபை சிவசரணம் (ஐயாச்சாமி)



மண்டைதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்பொழுது இல.38A, பிறவுண் வீதியில் வசித்தவருமான கனகசபை சிவசரணம் (ஐயாச்சாமி) 23.07.209 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-பொன்னம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-தில்லைவனம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மரிக்கொழுந்துவின் பாசமிகு அண்ணனும் காலஞ்சென்ற யோகாம்பிகையின் பாசமிகு கணவரும் சந்திரபாலு (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், இ.போ.ச., கோண்டாவில்), சந்திரவதனா (டென்மார்க்), வல்லவாம்பிகை(ஆசிரியை யா/கரம்பொன் சண்முகநாத ம.வி., ஊர்காவற்றுறை), சத்தியசீலன், சக்திதாசன்(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாராணி, பரஞ்சோதிநாதன் (டென்மார்க்), சண்முகரெட்ணம், மங்களேஸ்வரி(டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயசுந்தரேஸ்வரா(கட்டடத் திணைக்களம், திருகோணமலை), ஜெயசவுந்தரேஸ்வரா, ஜெயகிருஷ்ணா, ஜெயகௌரி, சங்கீதா பிருந்தா, பிரதீபன், டயானந்தா, டார்வின், திரியம்பகி, மதுரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(25.07.2009) சனிக்கிழமை அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்-சி.சந்திரபாலு
மகள்-திருமதி.ச.வல்லவாம்பிகை (ஆசிரியை).

38A, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

# 48 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

## 25.07.2009



அமரர்

## சின்னத்துரை பக்தகுணசீலன்

(உரிமையாளர் - பூங்கனிச்சோலை)

போர் மேகம் கலைந்தனை
ஊர் மீண்டும் கலகலத்தது
பேர் படைத்த நீ மட்டும்
ஊர் திரும்பாமை ஏன்?

அந்திமாலை வேளை உனை
அழித்த அரக்கர் கூட்டமும் கலைந்ததுவே
அன்பைச் சொரிந்த உறவுகள் நாம்
அழுதழுது தேம்புகின்றோம் - தினமும்

பிறந்த நாள் வாழ்த்துக் கூற
பிறப்பெடுத்து வாராயோ
உறவென்று நாம் அழைத்திட
உரிமையுடன் நீ வாராயோ

பூங்கனிச்சோலை,

குடும்பத்தினர்.


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## INVITATION FOR BIDS

### VADAKKIN WASANTHAM DEVELOPMENT PROGRAMME 180 DAYS - 2009

1. Government Agent, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the under mentioned works:-

| No | Description of work | ICTAD Grade | Direct Construction cost Rs. | Refundable cash deposit Rs. |
|---|---|---|---|---|
| 1. | Relocation of Health Centre near Water tank Stage-1 | M5/C6 Civil/ Buildings | 10 200 000/- | 100 000/- |
| 2. | Construction of Mini Gymnasium at Sports Complex | M5/C6 Civil/ Buildings | 9 700 000/ | 90 000/- |

2. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
3. To be eligible for contract award the successful Bidder shall not have been blacklisted and shall have been registered in the field of Building construction for grade, mention in the above table with the Institute for construction Training and Development (ICTAD).
4. Interested Bidders may obtain further information from the Capital Works & Planning Branch of University of Jaffna and inspect the Bidding documents at the same address on any working day from 9 a.m to 3 p.m. Contact number is: 021-2223748
5. A complete set of Bidding Documents in English Language may be purchased by interested bidders on the submission of a written application to the Senior Assistant Registrar/Capital Works & Planning from 27.07.2009 until 31.07.2009 between 9 a.m to 3 p.m upon payment of non refundable fee of Rs.1000/- (One Thousand Rupees) at the Shorff counter, University of Jaffna.
6. Bids shall be deposited in the Tender Box or sent by registered post to reach the Registrar. University of Jaffna, P.O.Box 57, Thirunelvely, Jaffna on or before 04.08.2009 at 2 p.m.
7. Bids shall be valid for a period of 30 days from the deadline for submission of Bids.
8. Bids will be opened soon after closing in the presence of bidders or their authorized representatives in the Board Room of University of Jaffna.

Capital Works & Planning
University of Jaffna,
P.O.Box 57, Jaffna.

K.Ganesh
Chairman,
Procurement Committe,
24.07.2009

(59856)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - பாகிஸ்தான் கூட்டறிக்கை சட்டபூர்வமான ஆவணம் அல்ல

## வெளிவிவகார இணை அமைச்சர் பேட்டி

புதுடில்லி, ஜூலை 25

எகிப்து ஷரம் - எல் - ஷேக் நகரில் இந்திய - பாகிஸ்தான் பிரதமர்கள் பேச்சுக்குப் பின்னர் வெளியிட்ட அறிக்கை சட்டபூர்வ ஆவணம் அல்ல. அது ராஜீயத்துறை வெளியிட்ட தகவல் குறிப்பு என்பதைத் தவிர அதற்கு வேறு எந்த முக்கியத்துவமும் கிடையாது என வெளியுறவுத்துறை இணை அமைச்சர் சசி தரூர், பத்திரிகையாளர்களுக்குத் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

டில்லியில் நாடாளுமன்றத்துக்கு வெளியே வியாழக்கிழமை அவர் பத்திரிகையாளர்களுக்கு இப்பேட்டியை அளித்துள்ளார். நிருபர்களின் கேள்விகளுக்கும் இவர் பதிலளித்துள்ளார். இவர் தம் பேட்டியில் கூறியுள்ளவை வருமாறு:-

இரு நாடுகளின் பிரதமர்கள் சந்தித்துப் பேசியதற்குப் பின்னர் தாம் எதைப்பற்றிப் பேசினார்கள் என்பது தொடர்பாகப் பத்திரிகைகளுக்குத் தகவல் தருவதற்காகத் தரப்படும் செய்திக்குறிப்புத்தான் அந்த அறிக்கை. அதற்கு சட்டபூர்வ ஆவண அந்தஸ்து ஏதும் கிடையாது. அடுத்து நடைபெறவுள்ள பேச்சுகளுக்கு அது மூல ஆவணமாகக் கருதப்பட மாட்டாது.

அந்த அறிக்கையில் உள்ள வார்த்தைகளுக்கு என்ன பொருள் என்பதில் அல்ல. அரசுகள் எப்படி நடந்துகொள்கின்றன என்பதைப் பொறுத்துத்தான் இருதரப்பு உறவும் அமையும். இந்த அறிக்கையால் இந்தியாவின் நிலையில் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. இது இந்தியாவுக்குப் பெரிய பின்னடைவு என்று எவராவது கருதினால் அவ்வாறே கருதிக்கொள்ளட்டும். அதனால் தீமை ஏற்பட்டுவிடப் போவதில்லை.

இந்தியாவின் நிலை என்ன என்பதைப் பிரதமர் மன்மோகன்சிங் அந்தப் பேச்சின் போது வெகு தெளிவாகக் கூறிவிட்டார். மிகவும் திட்டவட்டமான உறுதிமொழிகள் தரப்படவேண்டும். நம்பிக்கை ஊட்டக்கூடிய பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்படியிருந்தால்தான் பாகிஸ்தானுடன் ஒருங்கிணைந்த பேச்சுக்கு இந்தியா தயாராக முடியும் என்று அவர் தெளிவுபடுத்தி விட்டார்.

ஓர் அறிக்கை எப்படித் தயாரிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து கொள்கைகள் வகுக்கப்படுவதில்லை. எனவே, இந்தக்கூட்டறிக்கை குறித்து அதிகம் கவலைப்படத் தேவையில்லை. பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணமான பலுசிஸ்தானில் சீர்குலைவு நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபடுகிறது என்றும் அது தொடர்பான விவரங்களைத் தொகுத்து அந்தச் சந்திப்பின்போது இந்தியத் தரப்பிடம் கையளிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அப்படி எதையும் நான் பார்க்கவும் இல்லை, கேட்கவும் இல்லை. அப்படி ஏதேனும் என்னுடைய அமைச்சரவை சகாக்களிடம் தரப்பட்டிருக்குமானால் அவர்கள் அதற்கு உரிய வகையில் விளக்கம் அளிப்பார்கள் - என்றார். (சி)

# ஆஸி.வரும் இந்திய மாணவர்களுக்கு விசாவுடன் வழிகாட்டல் கையேடு

## தாக்குதலைத் தடுக்க அரசு நடவடிக்கை

அவுஸ்திரேலியாவில் இந்திய மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இனவாதத் தாக்குதலைத் தடுக்கும் பொருட்டு, இந்திய மாணவர்களுக்கு விசாவுடன் வழிகாட்டும் கையேடு வழங்கவும் அவுஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வணிகத் துறையின் செய்தித் தொடர்பாளர் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திடம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

''அவுஸ்திரேலியா வரும் வெளிநாட்டு மாணவர்களுக்கு இது ஒரு பாதுகாப்பான இடம் தான். இதைஉறுதிப்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

''இந்திய மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அவுஸ்திரேலியா பற்றிய தகவல்கள் அடங்கிய பிரதி ஒன்றை விசாவுடன் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

''இந்த வழிகாட்டிப் புத்தகத்தில் அவுஸ்திரேலியாவின் கலாசாரம், பண்பாடு ஆகியவை பற்றிய தகவல்கள் இடம்பெறும். இதனால் இந்திய மாணவர்கள் புதிய கலாசாரத்தைப் பற்றி நன்கு அறிந்துகொள்வார்கள்.

''இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியா வரும் மாணவர்கள் இங்குள்ள மாணவர்களுடன் சேர்ந்து பழகுவதற்கு இது உதவியாக அமையும். இந்திய மாணவர்களைத் தாக்கியவர்களை நீதியின் முன் நிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

''இந்திய மாணவர்கள் மீது சமீபத்தில் நடத்தப்பட்ட இனவெறித் தாக்குதல்களைத் தொடர்ந்து வெளிநாட்டு மாணவர்களைப் பாதுகாக்க அவுஸ்திரேலிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கன்பராவில் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி வெளிநாட்டு மாணவர்களுக்கான மாநாடு நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.''

# மின்தேவைக்கு அணுசக்தி: 60 நாடுகள் பரிசீலனை

மின்சாரத் தேவைக்கு அணுசக்தியைப் பயன்படுத்தலாமா என்பது குறித்து 60 நாடுகள் தீவிர பரிசீலனை செய்து வருகின்றன என சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் துணைப் பணிப்பாளர் யூரி சோகோலோவ் கூறுகையில், ''இந்த 60 நாடுகளில் 20 நாடுகள் அடுத்த 20 ஆண்டுகளில் அணுசக்தியை மின் உற்பத்திக்குப் பயன்படுத்தத் தொடங்கிவிடும்'' எனத் தெரிவித்தார்.

''அடுத்த 2 ஆண்டுகளில் அணுமின் சக்தியை உற்பத்தி செய்யும் நாடுகளின் எண்ணிக்கை 3 மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 38 நாடுகள் அணுமின் உற்பத்தியில் ஈடுபடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது'' என்றும் அவர் தெரிவித்தார்.

# இன்னும் பத்து வருட காலத்தில் செயற்கை மூளை உருவாகும்

இன்னும் பத்து வருட காலப்பகுதியில் செயற்கையாக மனித மூளையை உருவாக்க முடியும் என பிரபல விஞ்ஞானி ஹென்ரி மார்க்ராம், ஒக்ஸ்பெர்ட்டில் நடைபெற்ற மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

''ஏற்கனவே எலியொன்றிற்கு செயற்கை மூளையொன்று பொருத்தப்பட்டு, சாதகமான பலன்கள் பெறப்பட்டுள்ளன. மனநிலை பாதிப்புத் தொடர்பான நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சின்தட்டிக் முறையிலான செயற்கை மனித மூளையை பொருத்தமுடியும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''சுமார் இரண்டு கோடி மக்கள் மூளை தொடர்பான கோளாறுகளால் பாதிக்கப்பட்டு அல்லலுறுகின்றனர். புளூ பிரயின் என்ற இந்த மனித மூளை குறித்த ஆய்வுத் திட்டம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மனித மூளையின் கோடிக்கணக்கான செயற்பாடுகளை துல்லியமாக திட்டமிட்டு இந்த செயற்கை மூளை உருவாக்கப்படவுள்ளது'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

''எலிகளுக்கு நடத்திய பரீட்சார்த்த முயற்சிகள் மிகச் சிறந்த வெற்றியை அளித்துள்ளன. இன்னும் சில ஆண்டு கால இடைவெளியில் மனித மூளைக்கு பதிலீடாக செயற்கை மூளைகளை உருவாக்கக்கூடிய சாத்தியம் உண்டு'' என்றும் விஞ்ஞானி மார்க்ராம் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் இலஞ்ச ஊழல்: 3 மேயர்கள் உட்பட 44 பேர் கைது

நியூஜெர்சி, ஜூலை 25

அமெரிக்க நியூஜெர்சி மாகாணத்தில் ஊழல், மோசடி ஆகியவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து, முக்கிய பிரமுகர்கள் உட்பட 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நியூஜெர்சி மாகாணத்தைச் சேர்ந்த இரு நகர பிதாக்களான ஹோபோலிகன், ரிட்ஷ் பில்ட், செகாசஸ், துணை நகர பிதா லிபோனா பெல்டினி, சட்ட நிபுணர்கள் இருவர் ஆகியோரும் அடங்குவர்.


நியூஜெர்சி மாகாணத்தில் கள்ளச்சந்தை விற்பனை, சிறுநீரக விற்பனை, போலி குக்கி கைப்பைகள் விற்பனை ஆகியவை தொடர்பாக பரவலாக அடுத்தடுத்து முறையீடுகள் எழுந்தன.

இந்த முறையீடுகள் தொடர்பாக அரசியல் மட்ட விசாரணை நடத்த நியூஜெர்சி மாகாண அரசு உத்தரவிட்டது. இதற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து, பெரும்புள்ளிகள் உட்பட 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

# விஞ்ஞானி சாமிநாதன் இலங்கை செல்லக் கூடாது; மீறி நடந்தால் அவரின் வீடு முற்றுகையிடப்படும்!

## இயக்குநர் சீமான் எச்சரிக்கை



சென்னை,ஜூலை25

இலங்கையின் 'வடக்கின் வசந்தம்' திட்டத்துக்கு வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சாமிநாதன் உதவக்கூடாது. மீறி அவர் இலங்கை சென்றால் அவரது வீடு, நிறுவனங்கள் முன்பு முற்றுகைப் போராட்டம் நீடத்தப்படும் - என்று இயக்குநர் சீமான் கூறினார்.

நாம் தமிழர் இயக்கம் சார்பில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களை குடியமர்த்தும் முன்பே சிங்கள இராணுவத்தினர், பொலிஸார், நிர்வாகத் துறையினர் என சுமார் இரண்டரை லட்சம் சிங்களவர்களை தமிழர்கள் பகுதிகளில் குடியமர்த்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. அவர்களுக்கு வீடுகள் கட்டவும், வீதிகளை அமைக்கவும் நமது மத்திய, மாநில அரசுகள் வழங்கியுள்ள ரூபா 600 கோடியிலிருந்து நிதி பயன்படுத்தப்படுகிறது.

யாரை எங்கு குடியமர்த்துவது, வடக்கு மாகாணத்தை எப்படி சீரமைப்பது என்பது குறித்து தீர்மானிக்க 19 பேர் கொண்ட ஒரு குழுவை இலங்கை அரசு அமைத்துள்ளது. அதில் ஒருவர் கூட தமிழர் இல்லை.

இந்தக் குழு எப்படி தமிழர்களுக்கு நியாயமான குடியமர்வை ஏற்படுத்தும். இந்தக் குழுவைக் கலைத்துவிட்டு, சரி பாதி தமிழர்கள் இடம்பெறும் வகையில் ஒரு குழுவை அமைக்க இந்திய அரசும், தமிழக அரசும் வலியுறுத்த வேண்டும்.

இந்திய அரசும், தமிழக அரசும் வழங்கிய ரூபா 600 கோடியில்தான் இரு முகாம்களில் இந்திய வைத்தியசாலைகள் தொடங்கப்பட்டன.

கண்ணிவெடிகளை அகற்றும் 5 ஆயிரம் இந்திய இராணுவச் சிப்பாய்கள் இந்தப் பணத்தையே உபயோகிக்கிறார்கள். இதனை வரவேற்கிறோம். ஆனால் இந்தப் பணத்தைக் கொண்டே இலங்கை இராணுவ முகாம்களும், பொலிஸ் நிலையங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழர்களை அவர்களின் இடங்களில் அல்லாமல் அரசின் முடிவுக்கேற்ப விவசாயத் தொழிலாளிகளாகக் குடியமர்த்தும் திட்டத்திற்கும் இந்த பணம்தான் உபயோகிக்கப்பட இருக்கிறது. இதனைக் கண்டிக்கிறோம். தமிழ்ப் பெண்களை மட்டும் முன்பின் அறிமுகமில்லாத கிராமங்களில் குடியேற்றுவதற்கான 'வடக்கின் வசந்தம்' என்ற திட்டத்தை அறிவித்திருக்கிறது. அந்த பெண்க[illegible] பயன்படுத்த[illegible] தமிழ் ஆண்கள் பணியாற்ற மாட்டார்கள். அதற்கு பதிலாக சிங்கள கைதிகளை விவசாயப் பணிகளுக்கு ஈடுபடுத்த இருக்கிறார்கள்.

இதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவின் ஒரு இனக்கலப்பை உருவாக்க முனையும் நோக்கம் வெளிப்படுகிறது.

இந்தத் திட்டத்தில் வேளாண் ஆலோசனைகளை வழங்க வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சாமிநாதன் அழைக்கப்பட்டுள்ளார். இங்கிருக்கும் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர் இந்தத் திட்டத்திற்கு உதவ இலங்கைக்கு போகக்கூடாது. அவர் தனது முடிவை ஒரு வாரத்திற்குள் அறிவிக்க வேண்டும். மீறினால் இங்கே உணர்வுள்ள தமிழர்களை ஒன்று திரட்டி அவரது வீடு, நிறுவனங்கள் எல்லாவற்றையும் முற்றுகையிட்டுப் போராட வேண்டிய அவசியம் ஏற்படும். அவர் தனது முடிவை மாற்றிக் கொள்வார் என்று நம்புகிறோம் - என்றார். (சி)

# தொடர்கிறது ஈழ அகதிகளின் போராட்டம் தீவிரமாகிறது செங்கல்பட்டில் பாதுகாப்பு

செங்கல்பட்டு, ஜூலை 25

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இலங்கை அகதிகள் தாம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி 3ஆவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, அகதிகள் முகாமில் பொலிஸார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

கியூ பிரிவுப் பொலிஸாரால் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகள், தங்களை வழக்குகளில் விடுவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டி.எஸ்.பி. பாலசுப்ரமணியம், கியூ பிரிவு டி.எஸ்.பி.விஸ்வநாதன், இன்ஸ்பெக்டர் ஆல்பர் வில்சன், வட்டாட்சியர் வெங்கடேசன் உள்ளிட்டோர், போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு நடத்தினர்.

ஆனால், அவர்கள் பேச்சில் நம்பிக்கையில்லாமல் தமிழக அமைச்சர்கள் அல்லது முதலமைச்சரின் பிரதிநிதியாக யாராவது வந்து தங்களுடன் பேச்சு நடத்த வேண்டும் அப்பொழுது தான் பேச்சுக்கு உடன்படுவோம் இப்போது யார் பேசினாலும் நாங்கள் பேச்சுக்கு உடன் பட மாட்டோம் எனக்கூறி தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்ட எஸ்.பி.பிரேம் ஆனந்த் சின்ஹா உத்தரவின் பேரில் அகதிகள் முகாமில் பொலிஸார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்


MR.S.M.PUVIRAJ
ZONAL MANAGER - NORTH & EAST
BANGKOK & CHINA


MR.B.ALAN HUMER
ASST.GROUP FIELD MANAGER
BANGKOK & CHINA


MR.M.MAHENDRARAJ
ASST.GROUP FIELD MANAGER
BANGKOK & CHINA


MR.R.THAYAKARAN
FIELD MANAGER
BANGKOK & CHINA

HNB ASSURANCE
for a brighter future


MR.K.SRIRAM
ASST.FIELD MANAGER
BANGKOK & CHINA

2008,2009க்கான
விற்பனை மேம்படுத்தற் போட்டியில்
அகில இலங்கை ரீதியில் வெற்றி பெற்று
02.08.2009 அன்று
வெளிநாட்டுச் சுற்றுலா செல்லும்
வலய முகாமையாளர் மற்றும்
வெளிக்கள முகாமையாளர்களை
நாம் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துபவர்கள்
யாழ் பிராந்திய எச்.என்.பி.அசூரன்ஸ்,
முகாமையாளர் மற்றும் பணியாளர்கள்


MR.G.PIRATHEEPAN
TEAM LEADER
BANGKOK


MR.R.SENTHUJAN
GROUP LEADER
BANGKOK & CHINA


MR.M.MUGUNTHARAJ
GROUP LEADER
BANGKOK


MR.K.SUTHARSAN
GROUP LEADER
BANGKOK


MR.T.MOHANRAJ
GROUP LEADER
BANGKOK & CHINA

---

- முகாம்களில் உள்ள மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப
- முகாம்களில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு புதுவாழ்வு கிடைக்க
- இளைஞர்கள் அனைவருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கிடைக்க
- யாழ்.நகரம் அபிவிருத்தியும் புது வாழ்வும் பெற



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

## யாழ்.மாநகரசபைத் தேர்தல் 08.08.2009



| | |
|---|---|
| | X |
| 7 | X X |

## R.இரத்தினேஸ்வரன்

(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், பிள்ளையார் இன் ஹோட்டல்)
அவர்களுக்குப் பேராதரவு தாரீர்

நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் உங்கள் உறவுகளுக்கு கைகொடுக்கும் என்பது நிச்சயம்.

குறிப்பு: நேற்று முன்தினம் (23.07.2009) வியாழக்கிழமை காலையில் இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) எனும் முகவரியில் திரு.ஆர் இரத்தினேஸ்வரன் அவர்களின் கட்சிக் காரியாலயம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டு மக்கள் தமது குறைகளைத் தீர்ப்பதற்காக எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். அந்தக் குறைகள் உடனடியாக மேன்மைதங்கிய [illegible]யின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தீர்த்து வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இடம்பெயர்ந்தோர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# நோயாளர்களையாவது அரசு விடுவிக்குமா? ஒரு வாரத்தில் பதில் தர நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூலை 25

வன்னி இடம்பெயர்ந்தோர் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நோயாளர்களை விடுவிப்பது தொடர்பில் அரசின் முடிவை அறிந்து நீதிமன்றுக்குத் தெரிவிப்பதற்காக சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் ஒரு வார கால அவகாசம் வழங்கியது.

வன்னி இடம்பெயர்ந்தோர் முகாமில் பாடசாலை அதிபரான பெண்மணியையும், நோயாளியான அவரது கணவரையும், அவர்களின் இரு பிள்ளைகளையும் வெளியேறவிடாமல் சட்டத்துக்கு முரணான வகையில் படையினர் தடுத்து வைத்திருக்கின்றனர் எனத் தெரிவித்து, அந்தப் பெண்மணியின் தந்தையார் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோதே இவ்வாறு உத்தரவிட்டது.

வவுனியாவில் தற்போது தங்கியுள்ள கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்என்ற எழுபது வயது வயோதிபரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

முதியவர் என்ற முறையில் தம்மை விடுவித்த படையினர், குடும்பத்தின் ஏனையோரை - குறிப்பாக நோயாளியான தனது மருமகன்னை - தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதமானது என மனுதாரர் தமது மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, கே.ஸ்ரீபவன், பி.ஏ.இரத்தினாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி திஸானந்த லியனகே, பி.என்.தம்பு, எஸ்.என். விஜிதசிங்க ஆகியோரும் சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சஞ்சீவ இராஜரட்ணமும் ஆஜராகினர்.

இப்படி நோயாளிகளைத் தடுத்து வைத்திருப்பது முறையற்றது எனச் சுட்டிக்காட்டிய நீதியரசர்கள், இத்தகையோரை விடுவிக்க முடியுமா என்பதைக் கண்டறிந்து ஒரு வாரத்துக்குள் முடிவை நீதிமன்றுக்குத் தெரியப்படுத்துமாறு பிரதி சொலிஸிட்டர் ஜெனரலுக்கு உத்தரவிட்டனர். வழக்கை ஓகஸ்ட் 6 ஆம் திகதிக்கு அவர்கள் ஒத்திவைத்தனர். (சி)

# கே.பியின் தலைமைப் பொறுப்பு எமக்கு முக்கியமான விடயம் அல்ல

### ஹெகலிய கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 25

விடுதலைப் புலிகளின் தலைவராக கே.பி. நியமிக்கப்பட்டதை அரசு முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருதவில்லை எனப் பாதுகாப்புப் பேச்சாளரும், அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் தலைவராக கே.பி. நியமிக்கப்பட்டமை முக்கியத்துவமற்ற விடயம்.

விடுதலைப் புலிகளால் சேகரிக்கப்பட்டுள்ள பெருமளவு நிதியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக அவர் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்பார் என்பது எமக்கு எப்போதே தெரியும்.

விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டனர். அவர்களினால் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடமுடியாது. இதன் காரணமாக கே.பி. தலைவராக நியமிக்கப்பட்டமை குறித்து அரசு எவ்வித அச்சமும் கொள்ளவில்லை - என்றார்.

# நல்லூர் ஆலய உற்சவத்துக்காக ஊரடங்கில் தளர்வு எதுவும் இல்லை

### நேற்றைய கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழாக் காலங்களில் ஊரடங்கை நடைமுறைப்படுத்துவதில் தளர்வு ஏற்படுத்தப்படமாட்டாது. வழமையான நேரத்திலேயே ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்படும்.

ஆலய உற்சவ ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

ஆலய நிர்வாகிகள் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் உற்சவ ஏற்பாடுகள் குறித்து இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஆலய உற்சவம் பி.ப. 6மணிக்கு முடிவடைந்து விடும் என்பதால் ஊரடங்கு உத்தரவை நீக்குவதுஅவசியமற்றது எனவும் ஆலயச் சூழலில் தேவையற்ற நடமாட்டங்களைத் தவிர்க்கக்கூடியதாகவும் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருக்க வேண்டும் என சம்பந்தப்பட்டவர்கள் கருத்துத் தெரிவித்திருந்ததாகவும் அதையடுத்து ஊரடங்கு உத்தரவை வழமை போன்று நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆலய உற்சவத்தின் போது நல்லூர் இந்து விடுதியில் தற்காலிக பொலிஸ் நிலலயம் அமைவதுடன் பொலிசாரின் ரோந்து நடவடிக்கைகளும் இடம்பெறும் எனவும் மின் வெளிச்சத்தை சீராக வழங்கக்கூடியதாக விடுதிகளில் தற்போதுள்ள மின்விளக்குகளுடன் மேலும் 60 மின் குமிழ்கள் பொருத்தப்பட வுள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

குடிதண்ணீர், சுகாதார வசதிகள் மக்களுக்கு உகந்த முறையில் சீராக இடம்பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆலய வீதியில் மண்பரவுவதற்கு முன்னதாக சிறிய பூச்சிகளை அழிக்கக் கூடியதான மருந்துகள் இன்று சனிக்கிழமை தெளிக்கப்படும்.

இம்முறை மிகவும் கூடுதலான பக்தர்கள் ஆலயத்தில் கூடுவார்கள் என்பதால் தொண்டர் சேவைகள் நல்ல முறையில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தின் புனித சூழலை பாதுகாக்கும் வகையில் மாநகரசபைக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். என்று ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார். (1-111)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை 25

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதால் அனைத்து உடற்கல்வி டிப்ளோமாதாரிகளையும் கலந்துகொள்ளுமாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (201)

## இலங்கையில் தனது தூதரகத்தை அடுத்த வருடம் மூட சுவீடன் முடிவு

கொழும்பு, ஜூலை 25

இலங்கைக்கான தனது தூதரகத்தை அடுத்த வருட முற்பகுதியுடன் மூடி விடுவதற்கு சுவீடன் தீர்மானித்திருக்கிறது. கொழும்புடனான அபிவிருத்தி உதவிகளையும் முடிவுக்குக் கொண்டு வரவிருப்பதாக அந்த நாடு அறிவித்துள்ளது.

சுவீடனின் வெளிவிவகார அமைச்சின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தலைமை வகிக்கும் சுவீடன் தெரிவித்துள்ளதுடன் மேலும் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

கொழும்பிலுள்ள தூதரகத்தை மூடும் நடவடிக்கைகள் 2010 மார்ச் 31 இற்கு முன்னதாகப் பூர்த்தியாகவுள்ளன.

2007 இல் அபிவிருத்தி ஒத்துழைப்பு குறித்து மேற்கொள்ளப்பட்ட சுவீடன் அரசின் மீளாய்வு நடவடிக்கையின் போது இலங்கைக்கான இரு தரப்பு அபிவிருத்தியை முடித்துக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது நடைமுறையில் உள்ள அபிவிருத்தி ஒத்துழைப்பும் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

புதுடில்லியிலுள்ள சுவீடன் தூதரகத்துடன் இணைந்து இலங்கையிலுள்ள சுவீடிஷ் பிரஜைகள் மற்றும் நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கக்கூடிய ஆலோசனை அலுவலகமொன்றை உருவாக்குவது குறித்து ஆராயப்படுகிறது. (சி)

## கோதுமை மாவின் விலையில் மாற்றமில்லை

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் தருவிக்கப்பட்டு செயலகத்தால் ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கோதுமை மாவின் விலையில் மாற்றம் இல்லை என்று அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

ப.நோ.கூ. சங்கங்களுக்கு 69 ரூபாய்ப்படி வழங்கப்படும் கோதுமை மாவை 72 ரூபாய்ப் படி விற்பனைசெய்ய வேண்டும் என்றும்-

மறு அறிவித்தல் வரை எந்தவித விலை அதிகரிப்பும் செய்ய அனுமதிக்கப் படவில்லை என்றும்-அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த விநியோக நடவடிக்கையை கூட்டுறவு உதவி ஆணையாளர் மேற்பார்வை செய்ய வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

## வசந்தோதயம் இசை நிகழ்வு மத்திய கல்லூரி மைதானத்தில்

தென்னிந்திய மற்றும் இலங்கைக் கலைஞர்கள் பங்கேற்கும் வசந்தோதயம் இசை நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அப்சராஸ் இசைக்குழுவின் பின்னணி இசையுடன் இடம்பெறும் இந்த இசை நிகழ்வில் தென்னிந்தியாவின் பிரபல பாடகர்கள் கலந்துகொள்வர்.

அன்று இரவு 8மணிமுதல் இந்த இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (1-111-86)

## தென்மராட்சி அரச ஊழியருக்கு திங்கள் முதல் விசேட பஸ் சேவை

வடமாகாண இலங்கைப் போக்குவரத்துச் சபையினரால் தென்மராட்சிப் பிரதேச அரச ஊழியர்கள் பயணம் செய்வதற்கென விசேட பஸ் சேவை ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படுகிறது என பிரதான பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி கொடிகாமம் பேரூந்து நிலையத்தில் இருந்து 769ஆம் இலக்கப் பாதை வழியாக காலை 7.15 மணிக்குப் புறப்படும் பஸ் யாழ். கச்சேரி ஊடாக யாழ். பஸ் நிலையம் சென்றடையும். அதே போன்று மாலை 4.15 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் கச்சேரி ஊடாக கொடிகாமம் சென்றடையும். அதன் ஊர்காட்டுப் பலகையில் அரசஊழியர்கள் மட்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் எனத் தெரிவித்துள்ளார். (1-7)

## மரண அறிவித்தல்

### செல்வி கந்தசாமி தர்ஷிகா (தர்சி)



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா, மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி - ரூபமலர் தம்பதியினரின் அன்பு மகள் தர்ஷிகா 17-07-2009 இல் இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் தனுஷியா, தயாகரன் தனுராஜ், தர்சன் ஆகியோரின் பாசமிகு தங்கையும் சுபாஸ்கரனின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவக்கொழுந்து, சின்னத்தம்பி- அன்னம்மா ஆகியோரின் பேர்த்தியும் பாலரெட்ணசிங்கம்-தங்கராணி, வர்ணகுலசிங்கம்- புவனேஸ்வரி, விஜய ரெட்ணசிங்கம்-சிவந்தினி (ஜேர்மனி)- ஜெயகுலசிங்கம்-சசிலேகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகளும், செல்லத்துரை லலிதாமலர், மார்க்கண்டு- மனோகரமலர், கந்தசாமி-ஜெயமலர், மகேந்திரம்-அற்புதமலர், கணேசராஜா-ராஜமலர், ராஜரெட்ணம்- நேசமலர் (பிரான்ஸ்) காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் தேவி (கனடா),தங்கராசா - கலா (சுவிஸ்),தேவராசா-சாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு பெறாமகளும் குணசேகரம் -நேசமணி, பிறேமன் -அருந்தவமணி ஆகியோரின் பாசமிகு மருமகளும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2009) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் (மொன்றியல்) இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
செ.பாலரத்தினசிங்கம்
(அம்புலன்ஸ் சாரதி, சங்கானை அரசினர் வைத்தியசாலை)
செ.வர்ணகுலசிங்கம்
சிமெந்து தொழிற்சாலை
காங்கேசன் துறை (உரும்பிராய்).

நேசவுசாலை ஒழுங்கை,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

## மரண அறிவித்தல்கள்

### Dr.நாகலிங்கம் சண்முகராஜா

(இளைப்பாறிய உதவி வைத்தியர் -(மத்திய மருந்தகம்) கொக்குவில் )



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், சபாபதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகராஜா 23.07.2009 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -வர்ணமணி தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் - பவளம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும் ,சரோஜினி தேவியின் அன்புக் கணவரும், கோமதி (அமெரிக்கா), கோகுலன் (லண்டன்), பாமதி (கனடா), சுமதி (லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும், மதிவாணன், நக்கீரன், திருமாறன், ரேணுகா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜன், அனுஜா, திபாகரன், நர்த்தனா, சுவர்ணிகா, ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - ராஜேஸ்வரி மற்றும் சுப்பிரமணியம் - ரட்ணேஸ்வரி, நவரட்ணம் - புவனேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா - யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சிவகுமாரி, சோதிலிங்கம், செல்வகுமாரி, நாகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2009) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்பு - 0044 20835 70650(லண்டன்),
021 222 2941 (JAFFNA)

44, சபாபதி வீதி,
கொக்குவில்.

திருமால் அச்சகம் யாழ்ப்பாணம் , 021 222 5200.

### சுப்பிரமணியம் தங்கவேல் (நில அளவையாளர்)

**(WALKERS PILING .LTD. COLOMBO)**

தெல்லிப்பழை, மணியகாரன் வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, பூனாறி வீதியில் வசித்தவரும் தற்போது கொழும்பு, இரத்மலானையில் வசித்தவருமான சுப்பிரம ணியம் தங்கவேல் (22.07.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், பபிதா (லண்டன்), சுபிதா (கொக்குவில்), தினேஸ் (TECHNICAL OFFICER), புனிதா (டென்மார்க்), ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்குமரன் (லண்டன்), பத்மராஜ் (கொக்குவில் - ஆசிரியர் ), ஜெயரூபன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சண்முகநாதன் (மட்டக்குளி), சந்திராதேவி (மாளிகாவத்தை), சுகுமார் (மிருக வைத்தியர், புசல்லாவை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலரத்தினம் (கொக்குவில்), யோகம்மா (கனடா), தங்கராசா (கொக்குவில்), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (ஜேர்மன்), யோகரத்தினம்(வீரசிங்கம் , கனடா), யோகராசா (செட்டியார்தெரு,கொழும்பு), கமலாதேவி (ஜேர்மனி) புஸ்பரத்தினம் (தேவி - கனடா), விஸ்வரத்தினம் (இந்தியா), நகுலேஸ்வரன் (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.07.2009) ஞாயிறு காலை 7 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்.
077- 9315351,0112- 738716.

3/8, HENA ROAD,
MOUNTLAVINIYA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிபணிவதற்காக மக்கள் என்னைத் தெரிவுசெய்ய வில்லை.

இந்தியா எனது மூத்த சகோதரன் என்பதால் அதன் உணர்வுகளை நான் மதிக்கின்றேன். இதனை மேற்குலகிற்குத் தெளிவாகச் சொல்லியுள்ளேன்.

நான் யாருடைய கைப்பொம்மையும் இல்லை. ஒருபோதும் அப்படி இருக்கமாட்டேன். இதனை சகல நாடுகளும் உணரவேண்டும்.

நான் ஒரு இலங்கைத் தேசியவாதி என்றாலும், பதவியிலிருக்கும் வரை இலங்கையை இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதியளிக்கமாட்டேன்.

ஆயுதக் கொள்வனவு குறித்து இந்தியாவுக்கு எதனயும் நான் எப்போதும் மறைத்ததில்லை. எல்லாவற்றையும் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றேன்.

வெளிநாட்டவர்கள் இலங்கைத் தமிழர் குறித்து எனக்கு விளக்கமளிக்கத் தேவையில்லை. தமிழர்கள் எனது மக்கள். அவர்கள் குறித்து நான் பெருமைப்படுகின்றேன்.

தமிழர்களுக்கோ வேறு இலங்கையர்களுக்கோ அநீதி இழைக்கப்படுவதை நான் சகிக்கமாட்டேன். எனது குடும்பத்தினரும் தமிழர்களை மணந்துள்ளனர். எனது அமைச்சரவையிலும் தமிழர்கள் இருக்கிறார்கள்.

நான் ஒரு கேள்வி கேட்க் விரும்புகிறேன். விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்த மேற்குலக நாடுகள் தங்கள் நாடுகளிலுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு அடைக்கலம் அளிக்கத் தயாரா? விடுதலைப் புலிகளால்தான் அரசியல் தீர்வு தாமதமானது. அரசியல் தீர்வுக்கான ஆரம்ப நடவடிக்கையாக அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக நான் வெளிப்படையாகக் கருத்துகள் தெரிவித் திருக்கின்றேன். இதை இந்தியாவும் ஏற்றுக் கொள்ளும். இலங்கையும் ஏற்றுக்கொண்டுள்ளது - என்றார். (அ-சி)

## தீவுப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தூதரக அதிகாரிகளின் கவனத்திற் குக் கொண்டு வந்திருக்கின்றது.

புங்குடுதீவு, எழுவைதீவு, வேலணை, நெடுந்தீவு, மண்கும்பான் ஆகிய இடங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வியாழக்கிழமை வரையிலான காலப்பகுதியில் இந்தச் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இவற்றைப் பார்வையிட்டு விசாரணைகள் நடத்திய ஊர்காவற்றுறை நீதிபதி திருமதி. ஜோய் மகாதேவாவின் உத்தரவுக்கமைய பொலிஸார் இந்தச் சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்திருக்கின்றார்கள்.

யாழ். குடாநாட்டில் மீனவர்களோ அல்லது பொது மக்களோ கடலுக்குச் சென்று காணாமல் போனார்கள் என்று தகவல்கள் எதுவும் இல்லாத காரணத்தினால் இந்தச் சடலங்கள் இந்திய மீனவர்களுடைய வையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.


அடுத்த பிரிவு ஆரம்பம்
AAT, HNDA, Bcom.BBA பூர்த்தி செய்து பாடவிலக்கு பெற விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிப்போரும் 26.07.2009 க்கு முன் உடன் தொடர்பு கொள்ளவும்.
CIMA
விபரங்களுக்கு நேரில்
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764



விரிவுரையாளர் தேவை
யாழ்.நகரில் இயங்கும் பிரபல கணனி நிறுவனம் ஒன்றிற்கு Computerized Accounting (Quick Book, Accpac, Myob) Hardware Engineering ஆகிய கணனிக் கற்கை நெறிகள் கற்பிப்பதற்கு நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள் தேவை. உங்கள் விண்ணப்பங்களை 02.08.2009 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும். உதயன் மே/பா 3921



விற்பனையாளர் தேவை
யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் (Fancy) பான்சி கடைக்கு ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை. தங்கள் தொடர்பு தொலைபேசி இலக்கத்துடன் சுயவிபரத்தை 30.07.2009 ஆம் திகதிக்குள் கிடைக்கக் கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல: 3920 மே/பா உதயன்


## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாகப் புலிகளுடனான இறுதி யுத்தத்தின் போது அரசினால் 'யுத்த சூனிய பிரதேசம்' என்று பிரகடனப் படுத்தப்பட்டிருந்த இடங்களில் தஞ்சம் புகுந்திருந்த அப்பாவித் தமிழர்கள் வகைதொகையின்றி அரசின் திட்டமிட்ட ஷெல் தாக்குதல்களுக்கும், கனரக ஆயுதங்களின் தாக்குதல்களுக்கும் பலியாகினர் என்று புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர் சமூகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுவதாகவும், யுத்தக் குற்றங்கள் புரையோடிக் காணப்படுகின்றன எனவும், இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன என்றும் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர் சமூகம் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளது.

புலிகளுடனான இறுதி யுத்தத்தின் போது சுமார் 20 ஆயிரத்துக்கும் அதிகமானஅப்பாவித் தமிழர்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப் பட்டனர் எனவும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் சமூகம் பிரசாரங்களை மேற்கொண்டு வரு கின்றது.

இச்சூழ்நிலைகளில் இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் போர்க் குற்றவாளியாக நிறுத்துவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இப்புலம் பெயர் சமூகம் அமைப்பு ரீதியாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது எனவும் தெரியவருகின்றது. அதேநேரம் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் நலன் பேணும் நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர் சமூகம் முனைப்பாக ஈடுபடுமெனவும் தெரியவருகிறது.

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

20 முகாம்களில் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். உணவு, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அவர்களுக்குச் சரிவர வழங்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும், தங்களை மீளக் குடியமர்த்து மாறே அம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அந்த விடயத்தில் அரசு அர்ப்பணிப்புடன்தான் செயற்படுகின்றது.

அம்மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றும் பணி மிகத் தீவிரமாக இடம்பெறுகின்றது. இராணுவத்தினர் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பணி நிறைவுற்றதும் அகதிகள் மீளக் குடியமர்த்தப்படுவர். இந்த மக்கள் எந்தக் காலப் பகுதிக்குள் குடியமர்த்தி முடிக்கப்படுவர் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. இருப்பினும், 180 நாள்கள் வேலைத்திட்டத்தின்கீழ் மிக விரைவில் இம்மக்களை குடியமர்த்தவே நாம் முயற்சிக்கின்றோம்.

இதுபோல அகதி முகாம்களில் உள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். பொதுப் பரீட்சைகளை அகதி முகாம்களில் நடத்தவே திட்டமிட்டுள்ளோம். அதற்கென பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

அதேபோல், கல்வி கற்பிப்பதற்காக வெளியில் இருந்தும் ஆசிரியர்களை அழைத்துச் செல்ல நாம் திட்டமிட்டுள்ளோம். - என்றார். (அ-சி)


கணக்கீடு
P.பகீரதன்
B.B.A (Fm.Spl)
A/L 2010
ஒற்றைப் பதிவு
ஆரம்பம்: 25.07.2009 9am
Sat, Sun 9 - 10
NEC



PERSONAL CLASS
346 Stanly Rd, Jaffna
(Near DMI)
தமிழ் - K.தர்மராஜா
புதிய பிரிவு ஆரம்பம்
01.08.2009 வழமைபோல்
EAQ - BA-Part 1
ENGLISH
By:R.M...eswaran
(Dip-in.Eng
Sat/Sun 12-1 130-3.00



யாழ். BEACON
யாழ்.நகரில் என்றும் நிலையாக பிரபல பொருளியல் ஆசான் உங்கள்
M.C.சுதாகரன்
இன்று முதல்(25.07.2009) யாழ்.BEACON இல் பொருளியல் வகுப்புகளை நடாத்துவார்.
சனி 11am - 2010
ஞாயிறு 12 pm - 2011
நிர்வாகி.



உடன் தேவை: நல்லூர் திருவிழாக் காலத்தில் திறக்கவுள்ள புத்தகக் கடை ஒன்றிற்கு முகாமையாளர் (ஆண்/பெண்) விற்பனையாளர் (பெண்) தேவை
தொ.பே.0776510149



கருத்தரங்கு - 2009
Logic: P.கமல்
பகுதி I 27.07.2009 8.00 am - 1.00 pm
பகுதி II 28.07.2009 8.00 am - 1.00 pm
Navalar Education Center (NEC)


## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகரசபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வேட்பாளர்களை ஆதரிப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாளர் ஜி.வி.சகாதேவனும் சுயேச்சைக் குழு ஒன்றின் தலைவர் ஏபிரகாம் ஜீவராசாவும் சுயேட்சைக்குழு இரண்டின் தலைவர் ராஜேந்திரம் அந்தோனிதாஸும் நேற்று அறிவித்துள்ளனர்.

இந்த முடிவை எடுத்தமைக்கான காரணங்களை விளக்கி மூன்று அணியினரும் தனித்தனியாக அறிக்கைகளை விடுத்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் [வன்]னி/கிளிநொச்சி பிராந்தியக் கிளையின் இணைத் தலைவர்கள், நிர்வாகக்குழு அங்கத்தவர்கள், கட்சியின் நிரந்தர உறுப்பினர்கள் கலந்து கொண்ட பல சுற்றுப் பேச்சுக்களின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சகாதேவன் விடுத்துள்ள நீண்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய சில அம்சங்கள் வருமாறு:

* அரசுடன் இணக்கப்பாட்டுடன் உள்ள சக்திகளுக்கு, அதேவேளை எமது மக்களின் சுய உரிமைகளுக்கு பாடுபடுகின்ற அரசின் வெற்றிலைச் சின்னத்தில் வவுனியா நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு முழுமையான ஆதரவு கொடுத்தல். இதன்மூலம் அரசுடன் தமிழ் மக்களுக்குள்ள வெறுப்புணர்வை மேலும் தூண்டி அவர்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் அழிவு அரசியலை நடத்தாது மக்களை வளமூட்டும் எதிர்காலத் திட்டத்துக்கு ஊக்கமளித்தல்.

* நடைமுறைச் சாத்தியமான வழியில் எமது எதிர்கால அரசியல் முன்னெடுப்புகளுக்கு வழிசமைத்தல்.

* தடுப்பு முகாம்களுக்குள் கைதிகள் போல் அடைபட்டு செய்யாத குற்றத்திற்காக தண்டனை அனுபவித்து வரும் எமது உறவுகளின் துயர் துடைக்கும் உடனடிப் பணியை ஆரம்பிக்க சகல தரப்பினரையும் உற்சாகப்படுத்தல். உதாரணமாக கர்ப்பிணிப் பெண்கள், ஊனமுற்றோர், பல்கலைக்கழக மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வயோதிபக் குடும்பங்கள் விடுவிப்பு போன்ற விடயங்களில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள், குடும்பங்களை ஒன்று சேர்த்தல், உறவினர் கலந்துரையாட வழிவகை செய்தல் உட்பட முகாம்களில் மனச்சிதைவிற்கு ஆளாகிவரும் இரண்டு லட்சத்திற்கும் மேலான 18வயதிற்குட்பட்ட இளைய சமூகத்தின் நலன் காக்கும் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்கவும் தடுப்பு முகாம்களில் வாடிக்கொண்டிருக்கும் 15,000இற்கும் மேற்பட்ட எமது இளையோரின் வாழ்விற்கு மறுவாழ்வுப் பணியை ஆரம்பிக்கவும் டக்ளஸ் தேவானந்தா தேர்தலுக்குப் பிறகு அரசுடன் இணக்கப்பாடாகப் பேசி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்ற உறுதியின் அடிப்படையிலும் எமது ஆதரவினை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு முழுமையாக வழங்குகிறோம்.

* 13+ திருத்தச் சட்டத்தினை அமுல்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவும் வன்னி மக்களின் மீள்குடியேற்றம் வாழ்வாதார நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் தேசிய மாநாட்டின் மூலம் தமிழினம் ஒற்றுமைப் படும் இலக்குகளை அடைவதற்கும் தமிழர் விடுதலைக் கூட் டணி வன்னி/கிளிநொச்சி பிராந்திய கிளையானது அனைத்துத் தமிழர்களதும் ஒற்றுமையான ஆதரவினை வேண்டி நிற்கிறது. - என்றுள்ளது.

### சுயேச்சைக்குழு ஒன்று

சுயேச்சைக்குழு ஒன்றின் தலைவர் ஏபிரகாம் ஜீவராசா விடுத்துள்ள அறிக்கையில் -

* வவுனியா நகரசபையை மாநகரசபையாக தரமுயர்த்துதல், நலன்புரி நிலையங்களில் உள்ள எமது மக்களை மீள் குடியேற்றுவதற்கு உதவுவது, விளையாட்டுத்துறையை ஊக்குவித்தல், வர்த்தக சமூகத்தின் நன்மை கருதி தடைகளற்ற போக்குவரத்தை உருவாக்குதல், சட்டவிரோத வரி வசூலிப்புகளை இல்லாது ஒழித்தல், வவுனியா நகரசபைக் கட்டடத்தை புதுப்பித்தல், பராமரிப்பற்ற முதியோர்களுக்கு இல்லங்கள் அமைத்தல் , நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் அரசியல் தீர்வு.

இது போன்ற இன்னும் சில அம்சங்கள் நாம் சிந்தித்தவற்றை அடையாளப்படுத்தியிருப்பதால் அர்த்தமற்ற வகையில் தேர்தலில் போட்டியிட்டு ஈ.பி.டி.பியின் வாக்குப் பலத்தின் ஒரு சிறு பகுதியேனும் சிதறடித்துவிடக்கூடாது என்ற [...]ன நோக்கில் நாம் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து வாபஸ் பெறுகின்றோம்.

இதேவேளை வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யும் நோக்கில் எம்மாலான பிரசாரங்களையும் நாம் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றுள்ளது.

### சுயேச்சைக்குழு இரண்டு

சுயேச்சைக் குழு இரண்டின் தலைவர் ராஜேந்திரம் அந்தோனிதாஸ், அதன் செயலாளர் செல்லன் துரைமணி ஆகியோர் கூட்ட[ாக வ]ிடுத்துள்ள அறிக்கையில்-

ஈழமக்கள் ஜனநாயகக் கட[்சி] வவுனியா நகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்றால் அவர்களால் கூடுதலான அரசியல்ப் பணிகளையும், அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க முடியும் என்பதையும் மத்திய அரசோடு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி கொண்டிருக்கும் அரசியல் இணக்கப்பாடானது கூடுதல் நன்மைகளை எமது மக்களுக்கு செய்ய உதவும் என்பதையும் புரிந்து கொண்டு எதிர்வரும் நகரசபைத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கே எமது ஆதரவினை வழங்குவதென தீர்மானித்துள்ளோம்.

'வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 வேட்பாளர்களையும் ஆதரித்து நாளை முதல் நாம் பிரச்சாரங்களில் ஈடுபடவுள்ளோம். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியானது அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கும் மக்கள் நலன் சார்ந்த பணிகளை நிறைவேற்ற எமது பங்களிப்பினையும் வழங்குவதெனத் தீர்மானித்துள்ளோம். எமது நிலைப்பாட்டை ஏற்று எமது ஆதரவாளர்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

## இடம்பெயர்ந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ், வவுனியா, ஊவா மாகாணசபைத் தேர்தல்களில் தபால் மூலவாக்களிப்பு நாளை மறுதினமும், எதிர் வரும் செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளன. (சி)

## வன்னி அகதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜா உரிமைகள் அமைச்சர் கிறிஸ் இவான்ஸ் மற்றும் சட்ட விரோத குடியேற்றங்களுக்கான அமைச்சர் பீற்றர் வுல் கெட் ஆகியோர் கடந்த புதனன்று இலங்கை வந்தனர். இவர்கள் நேற்று வரை இலங்கையில் தங்கியிருந்தனர். அதன்போது கொழும்பில் பல உயர்மட்டப் பேச்சுக்களை மேற்கொண்டனர். குறிப்பாக சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா வுக்கு வருபவர்கள் குறித்தும், இந்த நடவடிக்கைக்கு எதிராக இலங்கை எடுத்துவரும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புகள் குறித்தும் பேசப்பட்டன.

மேலும் சமீபகால மோதல் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் குறித்தும், அவுஸ்திரேலிய அமைச்சர்கள் இலங்கை அரசின் தற்போதைய நடவடிக்கைகள் குறித்தும் பேச்சுகளை மேற்கொண்டனர் -என்று உள்ளது. (சி)


LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்'
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=



யாழ் மாணவர்களே...!
கணனிக் கல்வித் துறையில் ஓர் புதிய அத்தியாயம் உதயமாகிறது.
நாளைய உதயனில் எதிர்பாருங்கள்



L திறப்பு விழா அழைப்பு L
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விரோதி வருட ஆடி மாதம் 9 ஆம் திகதி (25.07.2009) சனிக்கிழமை மு.ப. 11 மணி தொடக்கம் 12.30 மணி வரையுள்ள சுப வேளையில் யாழ். நகரில் இயங்கி கொண்டிருக்கும் கிருபா லேணேர்ஸ் சாரதி பயிற்சிப் பாடசாலை என்னும் நிறுவனத்தின் கிளை நிறுவனத்தை மகாத்மா வீதி, நெல்லியடியில் திறந்து நடத்த இறைவன் அருள்கொண்டு இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து நிறுவனத்தை வாழ்த்தி விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(நெல்லியடியில் அனைத்து வாகனங்களுக்குமான பயிற்சி வழங்கப்படும்)

தலைமைக் காரியாலயம்
226 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொ.பே. 021 222 4353

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்
திரு.திருமதி A.கிருபாகரன்
'கிளை நிறுவனம்' மகாத்மா வீதி, நெல்லியடி. T.P 077 7225292


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org